Registered as a News Paper

பக்கங்கள் 06

விலை ரூபா 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 08 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | புரட்டாதி 02 | (18 - 09 - 1992) | வெள்ளிக்கிழமை | ஓசை 213

## கல்வி டிப்ளோமா கற்கைநெறி 25-ம் திகதி விண்ணப்பமுடிவு

அரசாங்க, தனியார் பாடசாலைகளில் கடமை புரியும் பட்டதாரிகளுக்கான கல்வி டிப்ளோமா கற்கைநெறி தமிழ்மொழி மூலம் கொழும்பு, யாழ்- பல்கலைக் கழகங்களில் நடத்தப்படுமென்று கல்வி உயர் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. ஆசிரியர்களும் அதிபர்களும், கல்வி நிர்வாகக் சேவை பட்டதாரி உத்தியோகத் தர்களும் இக் கற்கை நெறிக்குப் போட்டிப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப் படுவர். எதிர்வரும் ஜனவரி 1ஆம் திகதியன்று 50 வயது பூர்த்தியாகாதவர்கள் இம்மாதம் 25ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படுபவர் களுக்கு முழுச் சம்பளத்துடன் படிப்பு லீவு வழங்கப்படும்.

# பலாலித் தளத்தில் படைகுவிப்பு

# ராணுவ நடவடிக்கைக்கு முஸ்தீபு

## விமான நடமாட்டங்கள் அதிகரிப்பு

[யாழ்ப்பாணம்]

பலாலி படைத்தளத்தில் பெருமளவு இராணுவத்தினரும், ஆயுத தளபாடங்களும் குவிக் கப்பட்டு வருவதாகவும் இராணுவம் புதிய தாக்குதல் நடவடிக்கைக்குத் தயாராகி வருவ தாகவும் நம்பகரமாகத் தெரிய வருகின்றது இதே வேளை கடந்த இரு தினங்களாக விமான நடமாட்டமும் குடாநாட்டுப் பகுதியில் அதிகரித்துள்ளது.

கடந்த இரு தினங்களாக தென்பகுதியிலிருந்து விமானங்கள் பலாலி விமானத்தளத்திற்கு வந்து சென்ற வண்ணமுள்ளன. இவற்றிலிருந்து பெருந்தொகை துருப்புக்களும் தளபாடங்களும் பலாலித் தளத்தில் குவிக்கப்படுவதாக அறிய வருகிறது. இதேவேளை சில குண்டு வீச்சு விமானங்களும் விமானத் தளத்தில் தரித்து நிற்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்றுக் காலை முதல் நண்பகல்வரை வலி-வடக்கு, வலி தென்மேற்கு பகுதிகளையும் யாழ்-கரையோரப் பகுதிகளையும் உலங்கு வானூர்திகள் நோட்டமிட்டன. அத்துடன் யாழ்- குடாநாட்டில் உலங்கு வானூர்திகளின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப் பட்டது.

நேற்று இரவு எட்டு மணியளவில் உலங்குவானூர்தி ஒன்று தீவுப்பகுதிக்குச் சென்று திரும்பியதை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இந்நடவடிக்கைகள் யாழ்- குடாநாட்டின் மீதான புதிய நடவடிக்கைக்கான ஆயத்தமாக இருக்கலாமென நம்பப் படுகிறது.

## லொறிச்சாரதிகளிடம் பொலிசார் பணம் பறிப்பு

(வவுனியா)

பொருள்களைக் கொள்வனவு செய்து ஏற்றிக் கொண்டு வடபகுதி நோக்கி வரும் லொறிச் சாரதிகளிடம் சிறிலங்கா பொலிசார் வற்புறுத்திப் பணம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அனுராதபுரம், கொழும்பு போன்ற இடங்களில் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்து மதவாச்சிப் பகுதியில் தரித்து நிற்கும் லொறிச் சாரதிகளிடமே இவ்வாறு பணம் பெறப் படுகிறது.

லொறிகளினுள் தடைசெய்யப்பட்ட பொருள்கள் உள்ளன இந்த இடத்தில் நாம் சோதனை செய்தால் பொருள்களை இறக்கி ஏற்றும் கூலி அதிகமாகும் ஆகவே அந்தக் கூலிப் பணத்தை எமக்குத் தந்தால் நாம் சிரமம் தரமாட்டோம் என்றுகூறிபொலிசார் பணத்தைப் பெறுகின்றனராம். (தி)

## காவலரண் மீதுதாக்குதல் ஒரு புளொட் ஒரு படை பலி

வவுனியாநொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவ காவலரண் மீது நேற்று அதிகாலை 2-05 மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் ஒரு இராணுவமும்அக் காவலரணில் இருந்த 'புளொட்' உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

## ஜே. வி. பி. யின் ஆயுதங்கள் பொலிசாரால் மீட்பு

ஜே. வி. பியினரால் வீரக் கெட்டியவில் உள்ள காட்டுப் பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களும் வெடிப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என சிறிலங்காபொலிசார்தெரிவித்துள்ளனர். தென்பகுதியில் பொலிசார் இதுவரை மீட்ட ஆயுதங்கள், வெடிப்பொருள்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எறிகணை வீச்சு

(யாழ்ப்பாணம்)

வலிமேற்குப் பகுதிகளில் நிலை கொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் குடிமனைகளை நோக்கி ஷெல் மற்றும் 50 கலிபர்த்தாக்குதல் களை மேற்கொண்டனர்.

நேற்று காலை 6.00 மணியளவில் மேற்படி பகுதிகளில் இருந்து ஏவப்பட்ட ஷெல்கள், பண்டத்தரிப்பு, மூளாய், சுழிபுரம், விளான், சில்லாலை ஆகிய பகுதிகளில் வீழ்ந்து வெடித்தன. எனினும் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி தெரியவரவில்லை. (பா)

## தியாகி திலீபனின் நினைவாக வீடுகள் தோறும் பந்தல்கள்

(நமது நிருபர்)

நீராகாரமின்றி பன்னிரு நாட்கள்உண்ணாவிரதமிருந்து தியாக மரணமடைந்த தியாக தீபம் லெப்.கேணல் திலீபனை நினைவு கூர்ந்து தமிழீழமெங்கும் மேற்கொள்ளப்படும் சுழற்சி முறை உண்ணாவிரதத்தில் நேற்றும் பெருந்தொகையான சிறுவர்களும், பெரியவர்களும் கலந்துகொண்டனர்-

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து தமிழின விடிவிற்காக தமிழீழ மண்ணிற்காக தன்னுயிரை அணு அணுவாக விதைத்த தியாகி திலீபனின் ஐந்தாம்ஆண்டின்நிறைவு தினத்தை ஒட்டி நேற்று மூன்றாவது நாளாகவும் அனைத்து பிரதேசங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகளும், சிரமதானங்களும் இடம் பெற்றன.

கிராம ரீதியாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பொதுஸ்தாபனங்கள் மற்றும் அரச நிறுவன ஊழியர்கள் பெருமளவில் நேற்றைய உண்ணாவிரதநிகழ்வில் கலந்து கொண்டனர்.

காலை 7.00 மணிக்கு ஆரம்



பித்து வைக்கப்பட்ட இவ் உண்ணா விரத நிகழ்வுகள் மாலை 5-00 மணிக்கு நீராகாரம் வழங்கலுடன் முடித்து வைக்கப்பட்டது- குடாநாட்டின் அனைத்து வீதிகளிலும் மஞ்சள் சிவப்பு நிற கொடிகள் பறக்க விடப் பட்டிருப்பதுடன் வாழை தோரணங்கள் கட்டப் பட்டிருந்தன-

வீதிகளின் பிரதான சந்திகள் அரச நிறுவனங்களின் வாயில்கள் மற்றும் வீடுகளின் முன்பாக சிறிய அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அங்கே தியாகி லெப்- கேணல் திலீபனின் உருவப்படம் வைத்து மக்கள் மலரஞ்சலி செலுத்தியதுடன் தீபங்களும் ஏற்றியிருந்தனர்- கோண்டாவில்பகுதியில் பதினைந்து அடி உயர கொட்டகை அமைக்கப் பட்டு அங்கே தியாகி திலீபன் கதிரையில் அமர்ந்து உண்ணாவிரதம் இருந்த நல்லூர் நிகழ்வை உணர்த்தும் வண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தியாகி திலீபன் நினைவு இன்றையசிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் ...ருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

## சிறப்பு இணைப்பு

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளை

முள்ளன. இவற்றிலிருந்து பெருந்தொகை துருப்புக்களும் தளபாடங்களும் பலாலித் தளத்தில் குவிக்கப்படுவதாக அறிய வருகிறது. இதேவேளை சில குண்டு வீச்சு விமானங்க பகல்வரை வலி-வடக்கு, வலி தென்மேற்கு பகுதிகளையும் யாழ்-கரையோரப் பகுதிகளையும் உலங்கு வானூர்திகள் நோட்டமிட்டன. அத்துடன் யாழ்-குடாநாட்டில் உலங்கு ளவில் உலங்குவானூர்தி ஒன்று தீவுப்பகுதிக்குச் சென்று திரும்பியதை அவதானிக்கக் நடவடிக்கைக்கான ஆயத்த மாக இருக்கலாமென நம்பப் படுகிறது.

## லொறிச்சாரதிகளிடம் பொலிசார் பணம் பறிப்பு

(வவுனியா)

பொருள்களைக் கொள்வனவு செய்து ஏற்றிக் கொண்டு வடபகுதி நோக்கி வரும் லொறிச் சாரதிகளிடம் சிறிலங்கா பொலிசார் வற்புறுத்திப் பணம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது

அனுராதபுரம, கொழும்பு போன்ற இடங்களில் பொருள்களை ஏற்றிக் கொண்டு வந்து மதவாச்சிப் பகுதியில் தரித்து நிற்கும் லொறிச் சாரதிகளிடமே இவ்வாறு பணம் பெறப் படுகிறது.

லொறிகளினுள் தடைசெய்யப்பட்ட பொருள்கள் உள்ளன இந்த இடத்தில் நாம் சோதனை செய்தால் பொருள்களை இறக்கி ஏற்றும் கூலி அதிகமாகும் ஆகவே அந்தக் கூலிப் பணத்தை எமக்குத் தந்தால் நாம் சிரமம் தரமாட்டோம் என்றுகூறிபொலிசார் பணத்தைப் பெறுகின்றனராம். (தி)

## காவலரண் மீதுதாக்குதல் ஒரு புளொட் ஒரு படை பலி

வவுனியாதொச்சிமோட்டை சிறிலங்கா இராணுவ காவலரண் மீது நேற்று அதிகாலை 2-05 மணியளவில் விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் ஒரு இராணுவமும்அக் காவலரணில் இருந்த 'புளொட்' உறுப்பினர் ஒருவரும் கொல்லப்பட்டனர்.

## ஜே. வி. பி. யின் ஆயுதங்கள் பொலிசாரால் மீட்பு

ஜே. வி. பியினரால் வீரக்கெட்டியவில் உள்ள காட்டுப் பகுதியில் புதைத்து வைக்கப் பட்டிருந்த பெருமளவு ஆயுதங்களும் வெடிப் பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன என சிறிலங்கா பொலிசார் தெரிவித்துள்ளனர். தென்பகுதியில் பொலிசார் இதுவரை மீட்ட ஆயுதங்கள், வெடிப்பொருள்களில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## நிவாரண வெட்டுக் குறித்து ஐரோப்பிய சமூகத்திற்கு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்சப்பட்ட மக்களுச்கான உணவு நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கும் அரசின் நடவடிக்கைகளால் ஏற்படப்போகும் பாதிப்புக்கள் குறித்து ஐரோப்பிய சமூக அமைப்புக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டிருக்கிறது. யாழ். மாவட்டத்தில் மட்டும் சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட சுமார் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாக உள்ளனர். இவர்கள் தமது அடிப்படைத் தேவைகளையே பூர்த்தி செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

இந்நிலையில் மேற்படி அகதிகளுக்கான உணவு நிவாரணத்தை அரசு அரைவாசியாக குறைத்துள்ளது. இதனால் இம்மக்கள் பெரும் உணவு நெருக்கடிக்குள் சிக்கியுள்ளனர். இதனால் இம் மக்களிற்கு போசாக்கு குறைவு ஏற்பட்டு நோய்களின் தாக்கத்துக்கு உட்படுவர் என்றும் அரசின் உணவை அரைவாசியாகக் குறைக்கும் திட்டம் கண்டிக்கப்படவேண்டியது என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

## 1020 தமிழ் அகதிகள் நேற்று அனுப்பப்பட்டனர்

(சென்னை)

தமிழ் நாட்டில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதி மக்கள் 1020 பேர் நேற்றுச் சென்னையிலிருந்து நிக்கோபார்கப்பல் மூலம் திருகோணமலைக் குத்திருப்பி அனுப்பப்பட்டனர்

இதுவரை 26, 333 இலங்கைத் தமிழ் அகதி மக்கள் விமானம் மற்றும் கப்பல்மார்க்கமாக இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர் என்று தமிழக அரசின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது-

## வீரச்சாவு



2-ம் லெப். தங்கன்



வீரவேங்கை கரிகாலன்

காரைநகர் தூம்பில்பிட்டி பகுதியில் 12-9-92 அன்று சிறிலங்கா இராணுவத்தினருடன் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட நேரடி மோதலில் விடுதலைப்புலிகள் போராளிகள் இருவர் வீரச் சாவு அடைந்தனர்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகள்ஒத்துழைத்தால் நிவாரணத்தில் பாதிப்பு வராது

### -பி.தயாரத்ன

[கொழும்பு]

அகதிசள் உலர் உணவு நிவாரணதிற்கென 110 கோடி ரூபாவை மேலதிகமாக ஒதுக்கும்படி கடந்த 8 ஆம் திகதி பாராளுமன்றம் கூடிய போது முன்னறிவித்தல் கொடுக்கப் பட்டுள்ளது அடுத்த சபை அமர்வில் இந்த விடயம் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப் படும். எதிர்க்கடசிகள் இதற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கினால், அகதிசளுக்கான நிவாரண உசவியில் பாதிப்பு எதுவும் ஏற்பட மாட்டாது என்று புனரமைப்பு அமைச்சர் பி. தயாரத்ன தெரிவித்துள்ளார்.

வட-கிழக்கில் இடம் பெயர்ந்து வாழும் அகதிகளுக்கு அரசினால் வழங்கப்பட்டு வந்த உலர் உணவு நிவாரணத் தொகை ஐம்பது சதவீதம் குறைக்கப்பட்டது தொடர்பாக அமைச்சரிடம் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து தயாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

திறைசேரி பணம் ஒதுக்காத படியினலேயே அகதிகளுக்கான நிவாரணத்தை அரைவாசியாக குறைக்க வேண்டி ஏற்பட்டது இதற்காக 1.1 பில்லியன் ரூபாவை மேலதிகமாக ஒதுக்கும்படி கோரி பாராளுமன்றத்திற்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளேன் அடுத்த சபை அமர்வில் இதனை விவாதத்திற்கு எடுக்கும் போது எதிர்க்கட்சியினர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

சமீபத்தில் வடக்கில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக யாழ் மாவட்டத்தில் மட்டும் 80,000 தொடக்கம் 100,000 பேர் வரை அகதிகளாகி உள்ளதாக புள்ளி விபரங்கள்

(6 ஆம் பக்கம் பார்க்க)



...தில் நேற்றும் பெருந்தொகையான சிறுவர்களும், பெரியவர்களும் கலந்துகொண்டனர்-

ஐந்து அம்சக் கோரிக்கையை முன்வைத்து தமிழின விடிவிற்காக தமிழீழ மண்ணிற்காக தன்னுயிரை அணு அணுவாக விதைத்த தியாகி திலீபனின் ஐந்தாம்ஆண்டின்நிறைவு தினத்தை ஒட்டி நேற்று மூன்றாவது நாளாகவும் அனைத்து பிரதேசங்களிலும் உண்ணாவிரத நிகழ்வுகளும், சிரமதானங்களும் இடம் பெற்றன.

கிராம ரீதியாக பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், வர்த்தகர்கள், பொதுஸ்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்கள் அரச நிறுவனங்களின் வாயில்கள் மற்றும் வீடுகளின் முன்பாக சிறிய அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டு அங்கே தியாகி லெப்- கேணல் திலீபனின் உருவப்படம் வைத்து மக்கள் மலரஞ்சலி செலுத்தியதுடன் தீபங்களும் ஏற்றியிருந்தனர்- கோண்டாவில்பகுதியில் பதினைந்து அடி உயர கொட்டகை அமைக்கப்பட்டு அங்கே தியாகி திலீபன் கதிரையில் அமர்ந்து உண்ணாவிரதம் இருந்த நல்லூர் நிகழ்வை உணர்த்தும் வண்பித்து வைக்கப்பட்ட இவ் உண்ணா விரத நிகழ்வுகள் மாலை 5-00 மணிக்கு நீரா

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சிறப்பு இணைப்பு

தியாகி திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நாளையொட்டி தெங்கு பனம் பொருள் கூட்டுறவு நிறுவனங்களின் சிறப்பு இணைப்பு உள்ளே

## தியாகி திலீபன் நினைவு இன்றையசிரமதானபணிகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகளின் ஓர் அங்கமாக நடைபெற்று வரும் சிரமதானப் பணிகளில் இன்று நடைபெறவிருக்கும் பணிகளின் விபரம் வருமாறு.

டயஸ் குடியிருப்பில் வசிக்கும் மக்களால் டயஸ் குடியிருப்பில் சிரமதானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

கோப்பாய் வட்டப்பிரிவில் புத்தூர் மேற்கு கலைமதி வீதி திருத்தி அமைக்கப்படவுள்ளது

பருத்தித்துறை வட்டப் பிரிவில் திருவள்ளுவர் சனசமூக நிலைய ஆதரவில் தும்பளை தெற்கு வீதி திருத்தியமைக்கப்

(6 ஆம். பக்கம் பார்க்க)

## சுகாதாரவசதி செய்யாவிடின் 5கோடி சிறுவர் மரணமடைவர்

### ஐ. நா. சிறுவர் நிதியம் எச்சரிக்கை

(கொழும்பு)

தெற்காசியாவில் சுகாதார வசதிகள் மேம்பாடு ஏற்படாத பட்சத்தில் இந்த தசாப்தத்தின் இறுதியில் ஐந்து கோடி சிறுவர்கள் மரணமடைவர் என ஐக்கிய நாடுகள் சிறுவர்கள் நிதிய நிறைவேற்று இயக்குநர் ஜேம்ஸ் கிரான்ட் முன் எச்சரிக்கை செய்துள்ளார்:

இது தெற்காசியாவின் வளர்ச்சியில் பெரியதோர் பின்னடைவாக இருக்கும் எனவும் அவர் தெரிவித்தார்:

தெற்காசிய நாடுகளில் சிறிலங்கா, பாகிஸ்தான் என்பன சுகாதார வசதிகளுக்கென ஒதுக்கிவரும் நிதியினை பெருமளவில் குறைந்து வருவது குறிப்பிடத்தக்கது.

### கடலில் கொட்டிவிட்டதாகக் கூறி

## பெல்ஜியத்தின் ஆயுதங்களை சிறிலங்கா பயன் படுத்தியது

(மணிலா)

பெல்ஜியத்தினால் காலி துறைமுகத்தில் களஞ்சியப் படுத்தி வைக்கப் பட்டிருந்த சில ஆயுதங்கள் சிறிலங்கா அரசாங்கத்தினால் வடக்கு கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்தப்பட்டதாக செய்திகள்தெரிவிக்கின்றன

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, பெல்ஜியம் அரசாங்கத்தினால் மூன்று கப்பலில் ஏற்றக்கூடியளவு ஆயுதங்கள் காலிதுறைமுகத்தில்களஞ்சியப்படுத்தப் பட்டிருந்தன. பெல்ஜியத்தின் வாடிக்கையாளருக்கு விநியோகிக்கஎன இவ் ஆயுதங்கள் களஞ்சியப் படுத்தப் பட்டிருந்தன. இவை 1988 ஜூன் மாதத்திற்கு முன்னர் அப்புறப்படுத்தப் படவேண்டும் என சிறிலங்கா அரசாங்கத்துடன் ஒப்பந்தம் செய்யப் பட்டிருந்தது.

ஆனால் குறித்த காலத்தில் ஆயுதங்களை அப்புறப்படுத்தத் தவறிய பெல்ஜியம் அரசு அவ் ஆயுதங்களை சிறிலங்கா அரசைக் கொள்வனவு செய்யுமாறு கேட்டுக் கொண்டது. ஆனால் விலையில் ஏற்பட்ட தகராற்றினால் அவ் ஆயுதங்களை கொள்வனவு செய்ய மறுத்த சிறிலங்கா அரசாங்கம்அவற்றை கடலில் கொட்டி விட்டதாக அறிவித்திருந்தது.

ஆனால் அவற்றில் 30 மில்லி மீற்றர் துப்பாக்கிகளையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

**ஆறில்லாவிட்டால் என்ன குளம் இல்லையா?**

## வரி விளம்பரம்

### பாலராசிரியர் பயிற்சி

பாலராசிரியர் பயிற்சியில் க. பொ. த. (சா/த) சித்தியடைந்தவர்கள் சேரலாம். நேரில் பயில முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். தாலர் ஆசிரியர் சங்கம், பே/பா: உயர்கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி—யாழ்ப்பாணம். (5044)

### your watches, Clocks & Radios

Your Watches Clocks & Radios to repair? Contact us immediately we repair with full guarantee all Watch Batteries available Dilka Watch works 284, Stanely Road, Jaifna.
(Opposite old Vihare)
(சி-4970

### கைலேஞ்சி அன்பளிப்பு

உள்ளூர் கைத்தறியில் உருவான கைலேஞ்சி ஒன்று, மில்க்வைற் நீலசோப் பேலுறைகள் நூறு அனுப்பி அன்பளிப்பாகப் பெறுங்கள். உங்கள் அபிமான மில்க்வைற் நீலசோப் கட்டி ஒன்றின் விலை ரூபா. 7/- மட்டுமே. மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி/5061)

### வேப்பம் விதை

வேப்பம் விதை வாங்குகிறோம். அண்ணா கோப்பி கடைகளிலும் ஏற்கப்படும். மில்க்வைற் யாழ்ப்பாணம். (சி- 5048)


## தீப்பெட்டிக்கு இராணுவம் தடை

(வவுனியா)

தீப்பெட்டியை குறைந்தளவில் எடுத்துச் செல்வதற்கே இராணுவம் வவுனியாவில் அனுமதி வழங்கியுள்ளது.

வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்களை கடுமையாக சோதனையிடும் இராணுவத்தினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தீப்பெட்டியை வடபகுதிக்கு எடுத்துச் செல்லும்படி அறிவித்துள்ளனர்

அதிகளவில் தீப்பெட்டி எடுத்துச் செல்லப்படுபவர் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதோடு அவர் கொண்டுசெல்லும் தீப்பெட்டி பறிமுதல் செய்யப்படுகிறது. (தி)


### வர்த்தகர் சங்கம் அன்பளிப்பு


### திலீபன்

## நான்காம் நாள் (18.9.92)

நான்காம் நாள் எமது பிள்ளை
நலிந்தங்கே கிடந்தபோது
தேன் வண்டுக் கூட்டமென
திரண்டது மக்கள் படை!

பார்த்தவர் கண் குழைந்து
பாசமழை கொட்டியது
ஊர்ப் பயிர்... காக்க வந்த
உத்தமனின் நிலைகண்டு
போர்ப் பரணி பாடும் கவிஞர்கூட...
பொருமி யழும் காட்சி கண்டேன்!

மாணவர் பெரியோர் பெண்கள்
மாண்புறு இளைஞர் கூட்டம்...
ஆணவம் கொண்டு எம்மை...
அழித்திட வந்த...
அயலவர் படையைத் தூற்றியே பேசினர்!

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன்

பாடசாலைகளில் நடத்தப்படும்

## மேற்பார்வைத் திட்டங்கள் கிரமமாக நடைபெறவில்லை

### கல்வி அமைச்சு கோட்டங்களுக்கு அறிவிப்பு

(நல்லூர்)

நாடெங்கிலுமுள்ள பாடசாலைகளிலும் கல்வி நிறுவனங்களிலும் ஆண்டு தோறும் நடாத்தப்படும் மேற்பார்வைத் திட்டங்கள் இதுவரை சரிவர கிரமமாக நடைபெறவில்லை. என கல்வி உயர்கல்வி அமைச்சின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு எச். ஆர் ரூபசிங்க சகல கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்று நிருபத்தில் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மேற்பார்வையை அபிவிருத்தி செய்வதற்குச் சிறந்த முறையில் நடைமுறைப் படுத்தவும் கோட்ட மட்டத்தில் உரிய அதிகாரியின் பெயரை சிபார்சு செய்து கல்வி உயர்கல்வி அமைச்சின் பாடசாலை மேற்பார்வை பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். இப் பணிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த அதிகாரியையே தெரிவு செய்யுமாறு அவர் மேலும் பணித்துள்ளார்.

## இலங்கையின் வறுமைநிலை அடுத்த ஆண்டில் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையின் வறுமை நிலை தொடர்பான ஆய்வுகள் அடுத்த நிதியாண்டில் (1993) மேற்கொள்ளப்படும் என உலக வங்கி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது

1992 க்கான உலகவங்கியின் வருடாந்த அறிக்கையிலேயே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையைத் தவிர சகல நாடுகளிலும் உலகவங்கி வறுமை நிலை மதிப்பீட்டைச் செய்து முடித்திருக்கிறது என்றும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் இளைஞர்கள் கொழும்பில் மீண்டும் கைது

(கொழும்பு)

வத்தளைப்பகுதியில் கடந்த சில நாட்களில் பன்னிரண்டு ... செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் குற்றப்புலனாய்வு

## துப்பாக்கிச் சூட்டிற்கு குடும்பப்பெண் பலி

(வவுனியா)

வவுனியாவில் உள்ள தமிழ் குழு ஒன்றைச் சேர்ந்த ஒருவரின் துப்பாக்கிச் சூட்டிற்கு விஜயலட்சுமி என்ற பெண்பணி பலியானார் அவரின் சகோதரி ராஜேஸ்வரி ஆபத்தான நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

கடந்த திங்கட்கிழமை மாலை தெற்கு இலுப்பைக் குளத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

தங்கைக்கு பேன் பார்த்துக் கொண்டிருந்த அக்காவின் முதுகில் பாய்ந்த துப்பாக்கிச் சன்னம் ஒன்று மார்பு வழியாக வெளியே வந்து தங்கையின் முதுகைத் தாக்கியது. சூடுபட்ட அக்கா ஸ்தலத்திலேயே உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது

இச்சம்பவம் பற்றி இன்னும் ஒருவரும் கைது செய்யப்படவில்லை என வவுனியா பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

## 2143 காணாமற் போனோர் விபரம் மட்டக்களப்பில்பதிவு

(கொழும்பு)

இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் வரையில் காணாமற் போனதாக பதிவுசெய்யப்பட்டவர்களின் தொகையில் மட்டக்களப்பு மாவட்டம் முன்னணியில் இருப்பதாக மனித உரிமைகள் இயக்கத்தின் வருடாந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக காணாமற் போனதாக உறவினர்களால் கொடுக்கப்பட்ட 3589 புகார்களில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து மட்டும் 2143 புகார்கள் மனித உரிமை இயக்கத்திற்கு கிடைத்துள்ளது.

இதேவேளை காணாமற் போனதாக உறவினர்களால் கருதப்பட்ட 43 பேர் ஆயுதப் படையினரின் முகாம்களில் அல்லது சிறைகளில் இருப்பது மனித உரிமைகள் செயலணிக் குழுவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பதினெட்டு மாதங்களுக்கு மேலாக 316 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும் வழக்கு எதுவும் தொடரப்படாமல் 212 பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்றும், எதுவித பணிப்புரைகளுமின்றி 214 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், சட்டப்படி நீதிமன்றத்தால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் 28 பேர் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர் என்றும், உயர் நீதிமன்றம் விடுதலை செய்த பின்பும் படையினர் 18 பேரை தடுத்து வைத்திருப்பதாகவும், மனித உரிமைச் செயலணிக் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களிலும் காணாமற் போயிருப்பவர்களிலும் அநேகர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992 -10- 20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரி...

முறைக் காட்டுனர்
தாவரவியல் / இரசாயனவியல் / விலங்கியல் / பௌதிகவியல்

3. தற்காலிக போதனாசிரியர்.
கணிதமும் புள்ளிவிபரவியலும் / கணனி விஞ்ஞானம்

4. சம்பள அளவுத்திட்டம்:

1- தற்காலிக உதவிவிரிவுரையாளர் ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

2 தற்காலிக செய்முறைக்காட்டுனர் (பட்டதாரி) ரூபா 3250/- மாதமொன்றுக்கு (நிலையானது)

(பரீட்சைப் பெறுபேறு


## பாதுகாப்பு ஏற்பாடுகள் கிழக்கில் தீவிரம்

(மட்டக்களப்பு)


மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவம் தமது பாதுகாப்புக்களைப் பலப்படுத்தும்முயற்சியில்தீவிரமாக ஈடுபட்டுவருவதாக தெரிவிக்கப்படுகிறது

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்து வருவதை அடுத்தே இராணுவம் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு, அம்பாறை பிரதான வீதிகள், மற்றும் முக்கிய சந்திகள் தோறும் பெருந்தொகையான சோதனைச் சாவடிகளை இராணுவம் அமைத்துளது- இவற்றில் பெரும்பாலானவை நிரந்தர கட்டடங்களாக அமைக்கப் பட்டுள்ளன-

தற்போது இராணுவத்தினர் வீதிகளால் செல்லும் அனைத்து வாகனங்களையும் நிறுத்தி தீவிர சோதனையிடுவதாகவும் பாதசாரிகள் கூட மறிக்கப்பட்டு அவர்களின் கைப்பைகள் கூட இவர்களால் சோதனை இடப்படுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன-


## 2-ம் ஆண்டு நினைவாக



மண்ணகம் 07 — 03 — 1935

விண்ணகம் 18 — 09 — 1990

### அமரர் சு. சண்முகநாதன்

(கல்வி அதிகாரி, வேலணைக் கோட்டம்)

யாவருக்கும் நண்பன் இனியன்; நற்பண்பாளன்;
ஆய துறைகள் அனைத்தும் விளக்கமுற
ஓயாது உறங்காது உழைத்த தனிப்பிறவி;
தீவகத்தை முன்னேற்றச் செய் பணிகள் அத்தனைக்கும்
நாயகமாய் நின்று நடத்திவந்த 'சானா'! உன்
சேவைகளைப் போற்றிச் சிரந்தாழ்த்து கின்றோம்
நாம்!

(3193) பழைய மாணவர்களும், நண்பர்களும்.

## நினைவு கூருகின்றோம்...
## 1992 - 09 - 18

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**தீசன்** (சீ. ஜெகதீஸ்வரன்-புதூர் - மட்டக்களப்பு)

1989-ம் ஆண்டு யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

## இராணுவம் தடை

(வவுனியா)

தீப்பெட்டியை குறைந்தளவில் எடுத்துச் செல்வதற்கே இராணுவம் வவுனியாவில் அனுமதி வழங்கியுள்ளது.

வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்படும் பொருள்களை கடுமையாக சோதனையிடும் இராணுவத்தினர் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் தீப்பெட்டியை வடபகுதிக்கு எடுத்துச் செல்லும்படி அறிவித்துள்ளனர்

அதிகளவில் தீப்பெட்டி எடுத்துச் செல்லப்படுபவர் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதோடுஅவர்கொண்டுசெல்லும் தீப்பெட்டிபறிமுதல் செய்யப்படுகிறது. (தி)

## வர்த்தகர் சங்கம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் ஐந்தாம் ஆண்டு நினைவாக நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம், மருதடி விநாயகர் ஆலயத்தில் தங்கியுள்ள மாதகல, பண்டத்தரிப்பு பகுதிகளிலிருந்து இடப்பெயர்ந்த மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள், சவர்க்காரம் மற்றும் மரக்கறி வகைகளை அன்பளிப்பு செய்துள்ளது.

## பனாட்டு உற்பத்தி

வவுனியா மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகத்தினரின் பனை, தென்னைவள அபிவிருத்தி ஒன்றியம் தமிழீழ மூலவளங்களை பாவித்து சுய பொருளாதாரத்தை மேம்படுத்துவதையும் பனாட்டு உற்பத்தியில் அனைவரையும் ஈடுபடுத்துவதையும் பனை வளத்தினை பேணிக் காப்பதனையும் முக்கிய நோக்கங்களாக கொண்டு செயல்பட்டு வருகின்றது

எனவே ஒரு கிலோகிராம் பனாட்டு பதினைந்து ரூபாவாகவும், ஒரு கிலோ பனங்கழி ஐந்து ரூபாய் ஆகவும், மூன்று விதைகளுடன் கூடிய பனம் பழம் 1.50 ஆகவும் கிராமிய உற்பத்தி குழுக்கள, பனை, தென்னை அபிவிருத்திச் சங்க விற்பனை நிலையங்களிலும் கொள்வனவு செய்து வருகின்றது.

## இலவசமாக அரிச்சுவடி

விஜயதசமி தினத்திலே வித்தியாரம்பம் செய்து வைக்கவுள்ள வித்தியாசாலைகள், ஆலயங்கள் தங்களுக்கு வேண்டிய பனை ஓலை அரிச்சுவடிகளை எழுத்தில் விண்ணப்பித்து தம்மிடமிருந்து இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாமென மில்க்வைற் அதிபர் அறியத்தருகிறார்.

வைத்துள்ள சுரறு நிருபத்தில் தெரிவித்துள்ளார். மாறு அவர் மேலும் பணித்துள்ளார்.

# இலங்கையின் வறுமைநிலை அடுத்த ஆண்டில் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையின் வறுமை நிலை தொடர்பான ஆய்வுகள் அடுத்த நிதியாண்டில் (1993) மேற்கொள்ளப்படும் என உலக வங்கி தனது அறிக்கையில் கூறிப்பிட்டுள்ளது

1992 க்கான உலகவங்கியின் வருடாந்த அறிக்கையிலேயே இது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்தில் இலங்கையைத் தவிர சகல நாடுகளிலும் உலகவங்கி வறுமை நிலை மதிப்பீட்டைச் செய்து முடித்திருக்கிறது என்றும், அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழ் இளைஞர்கள் கொழும்பில் மீண்டும்கைது

(கொழும்பு)

வத்தளைப்பகுதியில் கடந்த சில நாட்களில் பன்னிரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

களனிப் பொலிஸ் பிரிவில் உள்ள வத்தளை ஜா-எல கந்தானை பகுதிகளிலேயே இவ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்கள் குற்றப்புலனாய்வு பொலிசாரிடம் கோரப்பட்டுள்ளதாகவும் அவ்வறிக்கையின் அடிப்படையில் சந்தேகத்திற்கு இடமில்லாதவர்கள் விடுதலை செய்யப்படுவர் எனவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

என்பது குறிப்பிடத்தக்கது.


# A/L-93

## பொருளியல் :- திரு. உதயன்

★ பகல் நேரவகுப்புக்கள் நடைபெறுகிறது.

★ வாரஇறுதி வகுப்புக்கள் நடைபெறுகிறது.

★ புதிய பிரிவுகள் ஆரம்பமாக உள்ளது.

(சி-5064)

# ECALOM

மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L - 1994 பிரிவு II

ஆரம்பமாகவுள்ளது.

பொருளியல் : திரு. உதயன்

★ நேர அட்டவணையை நேரில் பெறவும்

சி-5065)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1992-10-20 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

1. தற்காலிக உதவி விரிவுரையாளர்
தாவரவியல் / இரசாயனவியல் / கணிதமும் புள்ளிவிபரவியலும் / விலங்கியல் / பௌதிகவியல் / கணனி விஞ்ஞானம்

2. தற்காலிக செய்முறைச் காட்டுனர்
தாவரவியல் / இரசாயனவியல் / விலங்கியல் , பௌதிகவியல்

3. தற்காலிக போதனாசிரியர்.
கணிதமும் புள்ளிவிபரவியலும் / கணனி விஞ்ஞானம்

4. சம்பள அளவுத்திட்டம்:

1- தற்காலிக உதவிவிரிவுரையாளர் ரூபா 3900/- மாதமொன்றுக்கு (நிலையானது)

2. தற்காலிக செய்முறைக்காட்டுனர் (பட்டதாரி) ரூபா 3250/- மாதமொன்றுக்கு (நிலையானது)

(பரீட்சைப் பெறுபேறுகளுக்காக காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

3. தற்காலிக போதனாசிரியர் (பட்டதாரி) ரூபா 3250/- மாதமொன்றுக்கு (நிலையானது)

(பரீட்சைப் பெறுபேறுகளுக்காக காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும் வரை ரூபா 3000/- (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

இப்பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். தபால் மூலம் படிவங்களைப் பெற விரும்புவோர் சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப்பட்ட 23 X 10 ச மீ அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்க திணைக்களங்கள் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களின் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப்பல்கலைக் கழகம்

(சி-5066) 1992-09-15

தவகத்தை முன்னேற்றச் செய் ணிகள் அத்தனைக்கும் நாயகமாய் நின்று நடத்திநெந்த 'சானா'! உன் சேவைகளைப் போற்றிச் சிரந்தாழ்த்து கின்றோம் நாம்!

(3193) பழைய மாணவர்களும், நண்பர்களும்.

# நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 18

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா அதிரடிப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய-

**தீசன்** (சீ. ஜெகதீஸ்வரன்-புதூர் - மட்டக்களப்பு)

1989-ம் ஆண்டு யாழ்ப்பாணம் - பருத்தித்துறைப் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**லெப் வன்னிபாபு** (உருத்திரகணேசன் சிறிரங்கன்-புலோலிதெற்கு, பருத்தித்துறை-யாழ்ப்பாணம்)

**ஜீவன்** (ஐயாமுத்து உதயகுமார்-உடுத்துறை தாளையடி - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை, புற்றளைப்பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட முற்றுகையின்போது கொல்லப்பட்ட 2 - தமிழ் இளைஞர்கள்.

1990-ம் ஆண்டு யாழ்ப்பாணம் - காங்கேசந்துறைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட ஏறிகணைத்தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**சுலக்சன்** (தியாகராசா யோகராசா - வத்திராயன் வடக்கு, தாளையடி, யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நெல்லியடிப்பகுதியில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட இளம் தமிழ்ப்பெண்

1991-ம் ஆண்டு மட்டக்களப்பு-பள்ளித்திடல் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**நிமல்ராஜ்** (அம்பாறை)

**லெப்.பல்லவன்** (மட்டக்களப்பு)

நாட்டுப்பற்றாளரான

**அருமை**

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய-

**கப்டன்-பீற்றர்** (கணபதிப்பிள்ளை அரியநாயகம்-முனைக்காடு, கொக்கட்டிச்சோலை-மட்டக்களப்பு)

**மேஜர் விஜி** (முத்து விசுவலிங்கம் - 69, கொத்தம் பியன்குளம், துணுக்காய், மாங்குளம் - முல்லைத்தீவு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5063)




"நெல்லிப் போடியார் கல்"-குமரன் பிறந்த,வாழ்ந்த இடம் இதுதான்-அந்த இடத்திற்கே பெயரைத் தேடித் தந்த நெல்லிப் போடியார்கல் தான் குமரனுக்கு பலதடவை காப்பரணாக இருந்திருக்கிறது. செங்கலடி-பதுளை வீதியில் பன்குடாவெளிப் பகுதியில் தான் இது அமைந்துள்ளது. அப்பகுதியால் ரோந்து வரும் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் இவனது வீட்டிற்குள்ளும் நுழைவர்-தேடுதல் நடத்துவர். அப்போதெல்லாம் இந்தக் கல்லின்பின்னால் தான் அவன் மறைந்து கொள்வான். கரடியனாறு பகுதியில் விசேட அதிரடிப்படையினரின் முகாம் இருந்ததனால் அடிக்கடி அவனது பகுதிக்குள் ரோந்து - தேடுதல் நடக்கும். அதனால் நாளாந்தம் ஒளிந்து மறைந்து... அந்த வாழ்வு தொடர அவன் சம்மதிக்கவில்லை. சுதந்திரமாக தனது வீட்டில் தான் அதைப் போலவே எமது தேசத்தவர் அனைவரும் வாழ... போய் விட்டான் பயிற்சி முகாம்தேடி-

1987-ம் ஆண்டுக் காலப் பகுதியில்தான் இவன் இயக்கத்துடன் இணைந்து கொண்டான். கெவர் மலைப் பகுதியில்தான் அந்தப் பயிற்சி முகாம் அமைந்திருந்தது. அந்தப்பயிற்சி இவனுக்கொன்றும் கடினமானதாக இருக்கவில்லை குடும்பத்தின் ஏழ்மை நிலை காரணமாக 5-ம்வகுப்புடன் படிப்பை இடைநிறுத்தி, தனது வயதுக்கதிகமான வேலைகளில் ஈடுபட்டு வந்தவனாகையால் அந்தக் கடினமான பயிற்சிகள் இவனைப் பொறுத்தவரை சாதாரணமாகவே இருந்தன. பயிற்சி முகாமில் மிகத்திறமையாக குறிபார்ப்பவர்களுள் ஒருவனாக இனம்காணப்பட்டான். பயிற்சி முகாமை விட்டு வெளியேறிய நாள் தொடக்கம் இவன் சந்தித்த ஒவ்வொரு நிகழ்வுகளும்-இவன் பங்குபற்றிய ஒவ்வொரு தாக்குதல்களும் மிக முக்கியமானவை

பயிற்சி முகாமை விட்டு வெளியேவந்த அதே ஆண்டு சிவத்தப்பாலத்தடியில் இருந்த எமதுஅலுவலகமொன்றை சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் கைப்பற்றினார்கள். அப்போது அந்த அலுவலகத்திலிருந்து வெளியேறியவர்களில் குமரனும் ஒருவன். புலிகளை விரட்டிய வெற்றிக் களிப்பில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் நடமாடிக்கொண்டிருந்தனர் எமது அலுவலகத்தை அவர்கள் பயன்படுத்தத் தொடங்கினார்கள். படையினர் கூடுதலாக உள்ள நேரம் பார்த்து அலுவலகம் அதிர்ந்து தகர்ந்தது... படையினர் தான் அறிந்திருக்க மாட்டார்களே, 'கண்ணிவெடியைப் புதைத்து விட்டு அதன்மேல் அலுவலகம் நடத்துவார்கள் புலிகள்' என்பதை அந்தச்சம்பவத்தில் படையினர் பலர் பலியாகினர். அந்தச் சாதனையை நிகழ்த்தியவர்களுள் குமரனும் ஒருவன்

தொடர்ந்து இந்திய இராணுவத்துடனான மோதல்-வந்தாறுமூலையில், முதன்முதல் அவர்களுடன் மோதச் சந்தர்ப்பம் கிடைத்தது. அக்கால கட்டத்தில் பசிக்கும் போது சாப்பிடுவது என்பதை விட கிடைக்கும் போது சாப்பிடுவது என்ற நிலை— ஆனால், அந்த வாழ்வை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டான் குமரன். "காசத் தாங்க.... சாப்பாட்டக் கொண்டு தாறது நம்மட பொறுப்பு" என்றுகூறுவான் இவன். கிடைக்கும்சகல வழிகளையும் இதற்குப் பயன்படுத்துவான்- நாளாந்தம் பல மைல் தூரம் நடக்க வேண்டியிருக்கும்-மிகக் கூடிய பாரத்தைச் சுமக்க வேண்டியிருக்கும் அவனைப் பொறுத்த வரை அதெல்லாம் மிகச்சாதாரணம் காட்டு வழியே முட்கள் கிழிக்கும், யானைகள் எதிர்ப்படும்- ஆனால், இவன் பணி தடைப்படாது. யானைகளைச் சுடுவது இவனுக்குப் பிடிக்காது யாராவது யானையைச் சுட்டால் இவன் கொதித்தெழுவான்-பின் செஞ்சுவான் தான் யானைக்கு மிக அருகாமையில் வந்தும் சுடாமல் வருவதைப் பற்றி, "நானெல்லாம் யானையோட கதைச்சுக் கொண்டு வாறன் சுடுறனா? ஏன் யானையைச் சுடுறீங்க சுடாதீங்க!" என்று சொல்வான்.

"அகத்திக் குழி" - அந்தப் பகுதி மக்கள் இவனில் உயிரையே வைத்திருந்தார்கள். அவர்களுக்கு நிரந்தரத் தொழில் இல்லை. அறுவடைக் காலங்களில் கதிர் பொறுக்குவது - ஏனைய காலத்தில் குளத்தில் மீன் பிடித்துக் கருவாடு போடுவது ஏனைய சிறு தொழில்கள் செய்வது- இதுதான் அவர்களது வாழ்க்கை. நிலையில்லாத வாழ்வுவாழும் அவர்கள் அனைவருக்கும் இவனைப்பிடித்திருந்தது இவனுக்காகஎந்த இடரையும் தாங்கத் தயாராக இருந்தார்கள் அவர்கள். இந்திய இராணுவ காலப்பகுதியில், இவன் பெரும்பாலும் அவர்களுடன் தான் தங்கியிருந்தான். காலையில் இந்திய இராணுவம் காணப்பட்டால் வழக்கமாகக் குருவி கலைப்பதற்கு அடிக்கும் மணியை அடிப்பதில்லை என்று ஏற்கனவே இவனும், அந்தமக்களும் தீர்மானித்திருந்தனர். அதன்படி நடந்து கொண்டும் வந்தனர். அப்படித்தான் அன்றொரு நாள் காலை மணியொலிக்கவில்லை. இவனும் வெளியே வரவில்லை. இரவானதும் அவர்களைத் தேடிச் சென்றான். அவர்கள், இந்தியஇராணுவம் நிற்கும் இடத்தைக் காட்டிவிட்டு சாப்பாட்டைக் கொடுத்து அனுப்பினர். அடுத்த நாள்... மூன்றாம் நாள் இதே கதை தொடர்ந்தது நாலாம் நாளும் அப்படியே யிருக்கப் போவதில்லை என்று தீர்மானித்தான். அன்று எப்படியும் சண்டை செய்து தப்பிப் போவது என்று தீர்மானித்தான். அன்றும் அவர்களிடம் சென்றான். அப்போதுதான் அவர்கள் சொன்னார்கள்— அப்பகுதிக்கு அண்மையில் புதிதாக இந்திய இராணுவமுகாம் அமைந்துள்ளதென்றும், அதன் காவலுக்கே இவர்கள் நிற்கிறார்கள் என்றும் பக்கத்தில் முகாம் அமைந்தபின்னும் தமது போக்கை மாற்றவில்லை அவர்கள் தொடர்ந்து இவனுக்கு உதவி வந்தார்கள். அப்பகுதியெல்லாம் இவனுக்கு நன்கு பரிச்சயம். பெரும் பகுதி வெட்டவெளியாக இருந்தாலும், ஆங்காங்கே இருக்கும் சிறு பற்றைகள் இவனையும், இவனதுநண்பர்களையும் உருமறைப்புச் செய்து காத்தன. அங்கிருந்து சென்றுதான் முதிரையடி ஏத்தத்தில் தாக்குதல் நடத்தினார்கள்.

அத்தாக்குதலில் பதினொரு இந்திய இராணுவத்தினர் உயிரிழந்ததாக இந்திய வானொலி அறிவித்தது. அத்தாக்குதலைப்பற்றி அன்றிரவு பி.பி.சி பின்வருமாறுகூறிற்று: "புலிகள் நீண்ட காலத்திற்குப் பின் மட்டக்களப்பில்கண்ணிவெடித் தாக்குதலைப் ஆரம்பித்துள்ளார்கள், இதைத் தூரத்தில் இருந்து இயக்கும் கருவிகள் கொண்டு இயக்குகிறார்கள்,"— அத்தாக்குதலில் கண்ணிவெடியை வெடிக்கச் செய்தவன் இவனது நண்பன் டிசான் இன்று இருவருமே மாவீரர்களாகி விட்டனர்.

இந்திய இராணுவத்தினர் இவனைப் பிடிக்கப்படாதபாடுபட்டனர். தேடுதல்நடத்திய இடத்தில் இந்திய இராணுவ மணம் மறைவதற்குள் அங்கே இவன் நிற்பான். ஒரு முறை மாவடி ஓடையில் ஒரு மாட்டுப்பட்டி உள்ள இடத்தில் இந்திய இராணுவம் இவனையும், இவனது நண்பர்களையும் சுற்றி வளைத்தது. ஆனால், இவர்கள் தப்பிவிட்டார்கள். அதேபோல் இன்னொரு தடவை இந்திய இராணுவத்தினரை மிக அண்மையில் சந்திக்க நேர்ந்தது. பின்னால் வந்த நண்பர்களுக்கு வழிகாட்டியாகச் சென்று கொண்டிருந்தான் இவன். மறைந்திருந்த இந்தியப்படையினரைக்காணவில்லை இவன். அதேவேளை இவனது நண்பர்கள் கண்டுவிட்டார்கள். இவனுக்கு செய்தி சொல்ல முடியாத நிலை— இவனுக்குக் கேட்கும் சக்தி சற்றுக்குறைவு அதனால் ஒரு பள்ளத்திற்குள் இறங்குவது போல் இறங்கி அவர்கள் மறைந்து விட்டார்


மேஜர் குமரன்

கள். திரும்பிப் பார்த்தான் இவன் -- அவர்களைக் காணவில்லை விஷயம் புரிந்து விட்டது. இந்தியப்படையினர் இவனைக் கூப்பிட்டார்கள்- ஆனால், இவன் எப்படியோ தப்பிவிட்டான்.

இந்தியப்படையினர் இந்த மண்ணைவிட்டுப் போகும் காலங்களில் தேசத்துரோகிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இவன் பெரும் பங்கு வகித்தான் மயிலம்பாவெளியில் பல ஆயுதங்களையும் கைப்பற்றினான்.

பின்னர், இவன் மேலதிக பயிற்சிக்காக மன்னாருக்கு அனுப்பப்பட்டான். அதன்பின் 21-06-1990 அன்று கொண்டச்சி இராணுவ முகாம் மீது தாக்குதல் நடாத்தப்பட்ட போது, இவன் அதனை முறியடிக்க வரும் படையினரை எதிர்கொண்டான்-அத்தாக்குதலில் பல படையினர் கொல்லப்பட்டனர். கொண்டச்சி முகாம் தாக்குதலின் வெற்றிக்கு குமரனின் அணியின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களைத்தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் இவனது பணி தொடர்ந்தது ஆனையிறவிலிருந்து கிளிநொச்சி நோக்கிப் புறப்பட்ட இராணுவம் இவனது போர்த்திறனை அறிந்தது- 19-7-1990 தொடக்கம் பல நாட்கள் அந்தப் போர் நீடித்தது.

10-07-1991 அன்று ஆனையிறவு தளம் மீதான ஆ.க வெ நடவடிக்கைத் தாக்குதலில் இவனும் பங்கு பற்றினான். அத்தாக்குதலில்இவன் அடைந்த விழுப்புண்களைப் பார்க்கும் போது இவன் உயிர் பிழைப்பான் என எவரும் நினைக்கவில்லை. யாழ். மருத்துவமனையிலிருந்து இவன் மறு பிறவியெடுத்தவனாக வெளியேறினான். அதன்பின் பயிற்சிப் பாசறையில் குறிபார்த்துச் சுடும் பயிற்சி வழங்கும் பணியில் ஈடுபட்டான். குறி பார்த்துச் சுடுவதில் மிக ஆற்றலுள்ள இவனது அனுபவங்கள் புதிய போராளிகளுக்குப் பெரிதும் பயன்பட்டன. அபிநயத்துடன் இவன் விளக்கும் பாங்கு போராளிகளின் களைப்பையெல்லாம் போக்கியது.

மீண்டும் போர்க்களம் -- 30-06-1992 அன்று வெற்றிலைக்கேணியிலிருந்து ஆனையிறவு நோக்கி வந்த சிறிலங்காப்படையினருடன் அந்தச் சமர் நிகழ்ந்தது. அன்றும் வழமைபோலத்தான்- உற்சாகமாகக் குமரன் சண்டையை நடத்திக் கொண்டிருந்தான் சிறிலங்காப் படையினரின் முன்னேற்றம் இவனாற் சகிக்கமுடியாதது தான் நெருங்கினான் ... நெருங்கினான் .. அதன் பின் இவனை நாம் நெருங்க முடியவில்லை. நாம் நெருங்கமுடியாத தூரத்தில் இவனது புகழுடல் கிடந்தது-

"வெட்டவெளிகளில் சண்டை செய்வதைவிட காட்டிற்குள் சண்டையிடுவதே எமக்குச் சாதகமானது" என்றே பொதுவாக எல்லாப் போராளிகளும் கூறுவர். இவனோ இதற்குமாறாகத்தான் சொல்வான்,'வெட்டையில் எண்டா பாத்து சண்டை பிடிக்கலாம் காட்டில தான் கவனமா இருக்க வேணும். காட்டுக்க எங்கயிருந்தும் ஆபத்து வரலாம், அதால காட்டுக்கை தான் கூட அவதானமாக இருக்க வேண்டும்' என்று சொல்வான். சொல்வது போலவே நடந்தும் கொள்வான்-

ஒருமுறை ரெட்டைக்கல் மலைப் பகுதியில் இவனும், மேஜர் கண்ணனும், லெப். ரொமேசும், இன்னுமொரு போராளியும் சென்று கொண்டிருந்தனர்- இவன் மட்டும் சூழ்நிலையை அவதானித்தபடி கவனமாகச் சென்று கொண்டிருந்தான். "பட்.. பட்... பட் .." இவனது துப்பாக்கியின் சத்தம் கேட்டுத்திரும்பினர் ஏனையோர் அப்போது அவர்களுக்கு முன்னே உயிரிழந்த நிலையில் ஒரு சிறுத்தை விழுந்தது -- அது பாயும் நேரத்திலேயே அதனது உடலைப் பிள்ந்துவிட்டன இவனது வேட்டுகள் இவனது ஆற்றலைக் கண்டு வியந்தனர் அனைவரும்.

இராணுவ நடமாட்டமிருந்தாலும் இவன் பன்குடாவெளிப் பகுதியில் தனது கடமைகளைப் பின்போடுவதில்லை. அது சுமார் இரண்டு மைல் வெளியைக் கொண்ட பிரதேசமாகும். அவனுக்கு அந்த வெளிகள் பிடித்திருந்தன. அந்த வெளிகளில் தன்னால் திறமையாகச் சண்டை பிடிக்கமுடியுமென்று நம்பினான். அப்படித் தான் ஏனைய வெளிகளிலும் அவனது வரலாறு தொடர்ந்தது. ஆனால், புல்லாவெளியில் மட்டும் ஏன் இப்படி? . . . .

— பங்குந்தன்

# ஒருமுன்னாள்இடதுசாரியின்கதை

தனது பட்டமேற்படிப்புக்காக ... எழுத்தாளராக இருக்கிறார்) ... றார். அப்படியென்றால் ... தீவிர இடதுசாரியாக இருந்த

## 'மம்மி'க்களுக்குஒருமியூசியம்

மனிதன் இறந்து போன பின்னர் அவனது உடலை தைலமிட்டு பாதுகாக்கும் நடைமுறை இன்றும் பல நாடுகளில் இருந்து வருகிறது. இறந்த நேரத்தில் என்ன உடை உடுத்தினாரோ, அதே உடையுடன் சவப்பெட்டியில் வைத்துக் கண்ணாடியால் மூடி எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளும் நிலையில் பிணத்தை தைலமிட்டு பராமரித்து வருகின்றனர். இப்படி பாது

பயிற்சி முகாமை விட்டு வெளியேறிய நாள் தொடக்கம் இவன் சந்தித்த ஒவ்வொரு நிகழ்வுகளும்-இவன் பங்குபற்றிய ஒவ்வொரு தாக்குதல்களும் மிக முக்கியமானவை

பயிற்சி முகாமை விட்டு வெளியேவந்த அதே ஆண்டு சிவத்தப்பாலத்தடியில் இருந்த எமது அலுவலகமொன்றை சிறிலங்கா சிறப்பு அதிரடிப் படையினர் கைப்பற்றினார்

... அந்த வாழ்வை ஒரு சவாலாக எடுத்துக் கொண்டான் குமரன். ''காசத் தாங்க.... சாப்பாட்டக் கொண்டு தாறது நம்மட பொறுப்பு'' என்றுகூறுவான் இவன். கிடைக்கும்சகல வழிகளையும் இதற்குப் பயன்படுத்துவான்- நாளாந்தம் பல மைல் தூரம் நடக்க வேண்டியிருக்கும்-மிகக் கூடிய பாரத்தைச் சுமக்க வேண்டியிருக்கும் அவனைப் பொறுத்த வரை

... த்திருந்தது இவனுக்காகஎந்த இடரையும் தாங்கத் தயாராக இருந்தார்கள் அவர்கள். இந்திய இராணுவ காலப்பகுதியில், இவன் பெரும்பாலும் அவர்களுடன் தான் தங்கியிருந்தான். காலையில் இந்திய இராணுவம் காணப்பட்டால் வழக்கமாகக் குருவி கலைப்பதற்கு அடிக்கும் மணியை அடிப்பதில்லை என்று ஏற்கனவே இவனும், அந்தமக்களும் தீர்

... தூரத்தில் இருந்து இயக்கும் கருவிகள் கொண்டு இயக்குகிறார்கள்,''— அத்தாக்குதலில் கண்ணிவெடியை வெடிக்கச் செய்தவன் இவனது நண்பன் டிசான் இன்று இருவருமே மாவீரர்களாகி விட்டனர்.

இந்திய இராணுவத்தினர் இவனைப் பிடிக்கப்படாத பாடுபட்டனர். தேடுதல்நடத்திய இடத்தில் இந்திய இராணுவ மணம் மறைவதற்குள் அங்கே இவன் நிற்பான். ஒரு

... ஆனால், இவன் எப்படியோ தப்பிவிட்டான்.

இந்தியப்படையினர் இந்த மண்ணைவிட்டுப் போகும் காலங்களில் தேசத்துரோகிகள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இவன் பெரும் பங்கு வகித்தான் மயிலம்பாவெளியில் பல ஆயுதங்களையும் கைப்பற்றினான்.

பின்னர், இவன் மேலதிக பயிற்சிக்காக மன்னாருக்கு

... யிறவு நோக்கி வந்த சிறிலங்காப்படையினருடன் அந்தச் சமர் நிகழ்ந்தது. அன்றும் வழமைபோலத்தான்- உற்சாகமாகக் குமரன் சண்டையை நடத்திக் கொண்டிருந்தான் சிறிலங்காப் படையினரின் முன்னேற்றம் இவனாற் சகிக்கமுடியாதது தான் நெருங்கினான் ... நெருங்கினான் .. அதன் பின் இவனை நாம் நெருங்க முடியவில்லை. நாம் நெருங்கமுடியாத தூரத்

... அவனுக்கு அந்த வெளிகள் பிடித்திருந்தன. அந்த வெளிகளில் தன்னால் திறமையாகச் சண்டை பிடிக்கமுடியுமென்று நம்பினான். அப்படித் தான் ஏனைய வெளிகளிலும் அவனது வரலாறு தொடர்ந்தது. ஆனால், புல்லாவெளியில் மட்டும் ஏன் இப்படி? . . . .

— பங்குந்தன்

# ஒரு முன்னாள் இடதுசாரியின் கதை

இந்திய இலங்கை உடன்படிக்கை உருவாவதற்குச் சிறிது காலத்திற்கு முன்பு கொழும்பிலிருந்து ஒரு ரொட்ஸ்கையிஸ்ற்(சிங்களவர்) யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் இங்குதன்னைச்சந்தித்த இளைஞர் ஒருவரிடம் ''தெற்கில் இப்பொழுது புரட்சி இடதுசாரிகளின் கதவைத் தட்டுகிறது இது புரட்சிக்கான சரியான தருணம்'' என்று கூறினார். அவர் சொன்னது போல சில மாதங்களின்பின் அதாவது இந்திய - இலங்கை உடன்படிக்கை உருவாகிய சிறிது காலத்தில் தெற்கில் இடதுசாரிகளின் வீடுகள் இரவுகளில் தட்டடப்பட்டன. இம்முறை கதவைத் தட்டியது புரட்சி அல்ல. பதிலாக பழிவாங்கும் ஆவேசத்தோடு காணடபட்ட ஜே. வி. பிஅல்லது ஜே. வி. பியின் பெயரில் இயங்கிய கொலைப்படைகள் தான். இந்திய - இலங்கை உடன்படிக்கையை ஆதரித்த அநேகமான இடதுசாரிகளை ஜே. வி. பி கொல்லத்திரிந்தது. அந்நாட்களில் கொழும்பில் ஒரு இடது சாரி பின்வருமாறு சொன்னார்: ''கொல்லப்பட்ட தோழர்களின் சாவீட்டிற்குப் போவதே இப்பொழுது எங்களுடைய பார்டி வேர்க் ஆகி விடடது. ஒவ்வொரு நாளும் யாராவது ஒரு தோழருடைய சாவீட்டிற்குப் போகவேண்டியிருக்கிறது. என்னுடைய சாவீட்டிற்கு வர யார் யார் மிஞ்சுவார்களோ தெரியாது''

இவ்விதம் ஜே. வி. பி.யின் கங்காரு நீதிமன்றத்தால் மரணத்தீர்ப்பு விதிக்கப்பட்டவருள் தயான் ஜெயதிலகவும் ஒருவர். அப்பொழுது அவர் ஈ. பி. ஆர். எல். எவ் இன் மாகாண அரசில் ஒரு அமைச்சராக இருந்தார்.

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசறிவியற் துறைச் சிறப்புப் பட்டதாரியான தயான் ஜெயதிலக, தனது பட்டமேற்படிப்புக்காக லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிகழ்ந்துகொண்டிருந்த புரட்சிகள் பற்றிய கற்றலில் ஈடுபட்டவர். (இப்பட்ட மேற்படிப்பை அவர் பின்னர் முடிக்கவில்லை.) 83 இனவன்முறையின் பின் சில தடவைகள் யாழ்ப்பாணம்வந்திருக்கிறார். அப்போதெல்லாம் லத்தீன் அமெரிக்க அநுபவங்களிற் கூடாகஈழப்புரட்சியையும் பிரிவினையையும்ஆதரித்துப் பேசியிருக்கிறார், தீவிர இடதுசாரிகளால் அடிக்கடி நினைவு கூரப்படும் ''அயர்லாந்தின் விடுதலைதான் பிரிட்டிஷ் தொழிலாளிகளின் விடுதலைக்கு வழிவகுக்கும்'' என்ற கார்ல் மார்க்ஸின் மேற்கோளின் தொடர்ச்சியாக ஈழப் புரட்சியின் வெற்றியே சிங்களத் தொழிலாளிகளின் மீட்சிக்குப் பாதை சமைக்கும் என்ற தொனிப்பட தயான் யாழ் பல்கலைக்கழகத்தில் உரையாற்றியிருக்கிறார். அவருடைய நண்பர்கள் அவரை அவர் பிறந்து வளர்ந்த மேல் நடுத்தர வர்க்கச் சொகுசுகளை உதறிவிட்டு ஆபத்தான தலைமறைவு அரசியலுக்குத் தயாராகிய ஒரு இளம் புரட்சிகரப் புத்திஜீவி என வர்ணித்தார்கள் ஆனால் ரொட்ஸ்கையிஸ் ருக்கஸ் தயானை ஒரு கடும்ஸ்ரலினிஸ்ட் என்று கூறினார்கள் இலங்கைத்தீவில் ஸ்ரலின் காலக் கொலைகளை நியாயப்படுத்தும் ஒரு இளம் இடதுசாரி என்று அவர்கள் தயானை விமர்சித்தார்கள்.

கொழும்பில்,80 களின் முற்பாதியில் ஜே. ஆர் அரசைக் கவிழ்ப்பதற்கான சதியில் ஈடுபட்டார்கள்என்றகுற்றச்சாட்டின் பெயரில் தேடப்படுபவர்களாக அறிவிக்கப்பட்ட 21 பேரில் தயானும் ஒருவர் (ஈ. பி. ஆர். எல். எப் தலைவர் பத்மநாபாவும் இந்த 21பேரில் ஒருவர்) இவர்களில் தயானின் நண்பரான பெ. முத்துலிங்கம் (இவர் இப்பொழுது தினகரன் வாரமஞ்சரியில் பத்தி எழுத்தாளராக இருக்கிறார்) பல்கலைக்கழக விரிவுரையாளரும், தயானின் காதலியுமான புல்சாரா லியனகே போன்றோர் கைதுசெய்யப்பட்டார்கள். தயான் தலைமறைவாகினார். பின்னர் இந்திய-இலங்கை உடன்படிக்கையோடுதான் அவரால் வெளியில் வர முடிந்தது. அவர் கொண்டிருந்த மொஸ்கோ சார்பு நிலைப்பாடு காரணமாக, மொஸ்கோவிற்கும்புதுடில்லிக்கும் இடையில் அப்போது இறுக்கமான உறவு நிலவியது என்பதால், தயான் இந்திய-இலங்கை உடன்படிக்கையை நிபந்தனையின்றி ஏற்றுக்கொண்டார். தொடர்ந்து ஈ. பி. ஆர். எல் .எப் மாகாண அரசில் அவரிற்கு ஒரு அமைச்சர் பதவி தரப்பட்டது இதனால் ஜே. வி. பி.யின் கங்காரு நீதிமன்றம் தயானிக்கு மரணத் தீர்ப்பு வழங்கியது.

எனினும், ஈ.பி.ஆர்.எல் எப் அரசில் தயான் நீண்டகாலம் நின்று பிடிக்கவில்லை. ஒரு நாள் பரபரப்பான, சர்ச்சைக்குரிய ஒரு அறிக்கையை வெளியிட்டுவிட்டு தயான் தன்து பதவியை ராஜினாமாச் செய்தார்,அந்தஅறிக்கை ஐ.பி.கே எவ். இன் பிரசன்னத்தையும், ஈ.பி. ஆர். எல். எப் இன் அரசியல் நிலைப்பாட்டையும் கடுமையாக விமர்சித்தது.

இது நடந்து சிறிது காலத்தின் பின் கொல்லப்பட்ட நடிகர் விஜயகுமாரணதுங்காவின் சிறிலங்கா மக்கள் கட்சியின் மத்திய குழுவில் தயானும் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டது. இதுபற்றி அவருடைய முன்னாள் நண்பரான இடதுசாரி ஒருவர் சொன்னார்; ''சிறிலங்கா மக்கள் கட்சியில்தான்வெகுசனதளம் இருப்பதாக தயான் கூறுகிறார். அப்படியென்றால் அதைவிடப் பெரிய வெகுசனத்தளம் எஸ்.எல்.எவ்.பியிடம் இருக்கிறது, யு.என். பீ. இடம் இருக்கிறது. சிலசமயம் தயான் அங்கேயும் போகக் கூடும்'' என்று தனது முன்னாள் நண்பரின்கூற்றைதயான் விரைவில் மெய்யாக்கினார். சிறிது காலத்தில் தயான் ஜனாதிபதி பிரேமதாசாவின் சிந்தனையாளர்களில் ஒருவராகி விட்டார்என்று கொழும்பில் கதைக்கலாயினர்.

இப்பொழுது அவருடைய ஒரு காலத்து நண்பர்கள்அவரிடமிருந்து விலகிச்செல்கிறார்கள். பலர் அவரைக்கண்டு அச்சப்படுகிறார்கள் தமதுஉள்ரகசியங்களை தயான் பிரேமதாசாவிடம் கூறிவிட்டார் என்று ஈ. பி. ஆர். எல். எப் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக, எதிர் கட்சிகளும் அதிருப்தியாளர்களும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்களை எழுப்பும் போதெல்லாம், தயான் ஒரு முன் தடுப்புப் (Buffer) போல பதில் சொல்ல முன்வந்து விடுகிறார். ஜே. வி.பியால் கொல்லப்பட்டவர்கள் என்று சந்தேகிக்கப் படுபவர்களின் மிக நீண்ட பட்டியல் ஒன்று அவரிடம் இருக்கிறது. ஜே.விபியை அதன் பாணியிலேயே முறியடிக்க வேண்டியிருந்தது என்பது அவருடைய வாதமாயுள்ளது. ஒரு ஸ்ரலினிற் இவ்விதம் கூர்ப்படைந்திருப்பது அதிர்ச்சியூட்டக் கூடியது அல்ல என்று அவருடைய முன்னாள் நண்பர்கள் கூறுகிறார்கள். ஒரே சமயத்தில் லங்கா கார்டியினின் இணை ஆசிரியராகவும், சண்டே ஒப்சேவரில் பத்தி எழுத்தாளராகவும் இருக்க தயானால் எப்படி முடிகிறது? இந்த இரண்டக நிலையைப்பற்றி விமர்சிக்கும் போது அவரை நன்கு தெரிந்தவர்கள் அவருடைய திருமணவைபவத்தை நினைவு கூர்கிறார்கள். ஒரு தீவிர இடதுசாரியாக இருந்த நாட்களிலேயே அவர் தனது முதலாவது காதலியைத் திருமணம் செய்தபோது அது ஒரு பிரபுக்குடும்பத்து வைபவம் போல நடத்தப்பட்டதாக அவர்கள் கூறுகிறார்கள்.

இத்தகையஇரண்டகநிலைக்கான விலையை, அல்லது எல்லாக் குத்துக்கரணங்களுக்குமான விலையை, தயான், கடந்தமாதம் கனத்தை மயானத்தில் செலுத்தவேண்டி வந்தது. தளபதி கொப்பேகடுவவின் இறுதிக் கிரியைகளின் போது (இன்னும் சரியாக இனங்காணப்படாத) ஆவேசமடைந்த கும்பல் ஒன்று தயானைத் தாக்கியது. இதில் தயானின் ஆடைகள் அநேகமாகக்கிழித் தெறியப்பட்டன. இச்சம்பவம் பற்றி தயானைத் தெரிந்த யாழ்பாணத்திலுள்ள விமர்சகர் ஒருவர் பின் வருமாறு கூறினார். தயான் எப்பொழுதும் தியரியில் Theory) நிற்பவர்தான். கிறவுண்ட்றியலிற்றி- களயதார்த்தம்- அவரிற்கு எப்பொழுதுமே தெரிந்ததில்லை. கனத்தையிலும் கிறவுண்ட் றியலிற்றி பற்றிய சரியான மதிப்பீடுகள் இல்லாத படியால்தான் அவர் அடிவாங்க வேண்டி வந்தது.

ஆனால் தயான், தொடர்ந்தும் களயதார்த்தத்தைக் கவனத்திற் கொள்ளாதவராகவே காணப்படுகிறார். சமீபத்தில் 'ராவய' பத்திரிகை தயானின் கடும் தாக்குதலிற்கு இலக்காகியது. ஏற்கனவே கனத்தைச் சம்பவத்தை ஒரு மக்கள் எழுச்சி என வர்ணித்தமைக்காக தயான் ராவய மீது கோபமாக இருந்தார். இந்நிலையில், கொல்லப்பட்ட தளபதி கொப்பேகடுவவின் யாழ்ப்பாணத்துக்கான சமர் பற்றிய ரகசியப் போர்த்திட்டங்களை ராவய சமீபத்தில் பகிரங்கப் படுத்தியது. தயானிற்குவாய்ப்பாகி விட்டது. ராவய செய்தது தேசத்துரோகம் என்று

- நிலாந்தன் -

(5 ஆம் பக்கம் பார்க்க)

## 'மம்மி'க்களுக்கு ஒரு மியூசியம்

மனிதன் இறந்து போன பின்னர் அவனது உடலை தைலமிட்டு பாதுகாக்கும் நடைமுறை இன்றும் பல நாடுகளில் இருந்து வருகிறது. இறந்த நேரத்தில் என்ன உடை உடுத்தினாரோ, அதே உடையுடன் சவப்பெட்டியில் வைத்துக் கண்ணாடியால் மூடி எப்போது வேண்டுமானாலும் பார்த்துக் கொள்ளும் நிலையில் பிணத்தை தைலமிட்டு பராமரித்து வருகின்றனர். இப்படி பாதுகாக்கப்படும் பிணங்களுக்கு 'மம்மி' என்று பெயர்.இந்த மம்மிக்களுக்கு மெக்சிக்கோ நாட்டில் ஒரு பெரிய மியூசியமே உள்ளது.

ஆச்சரியமாக இருக்கிறது அல்லவா? உண்மைதான்! ரசாயன தைலங்கள் இடப்பட்டு கண்ணாடிப்பேழைக்குள் உடல்கள் பாதுகாக்கப்படும் போது சடலம் இப்போது கூட ஏதோ தூங்குவது போலத்தான் தெரியும் அந்த அளவிற்கு மனித உடலைப்பாதுகாக்க நீண்ட காலத்திற்கு முன்பிருந்தே வழி வகைகள் இருந்து உள்ளன.

பழங்கால பொருள்களையும், மிருகங்களின் உடல்களையும் கொண்டதைத்தான் மியூசியம் என்கிறோம். அதாவது அரும் பொருள் காட்சி நிலையம். ஆனால், இறந்த மனித உடல்களை வைத்து மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது மெக்சிக்கோ நாட்டில்தான். பிணங்களை ரசாயன தைலமிட்டு பாதுகாத்து வரும் முறை பல நாடுகளில் இருந்தாலும் மம்மிக்களை மட்டுமே காட்சிப் பொருளாகக் கொண்ட மியூசியம் உலகில் வேறு எங்கும் இல்லை.

மெக்சிக்கோவில், குவானஜாடோ என்ற பகுதியில் மம்மிக்கள் மியூசியம் அமைந்துள்ளது. கலைவடிவம் நோக்கினால் உலகில் வேறு எங்கும் காணமுடியாத அற்புத கண்காட்சி இது. இங்கு 116 பிணங்கள் தைலமிடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன் இறந்தவர்களின் பிணங்கள் பார்ப்பதற்கு மரம் போல் இருந்தாலும் அவற்றின் உருவத்தோற்றம் நம்மை ஆச்சரியப்பட வைக்கும்.

கடைசி வினாடியில் எந்தச் செய்கையில் மனிதன் இறந்தானோ அதே போஸில் அவனது 'மம்மி' இங்கு காணப்படுகிறது ஒருவர் இறந்த போது வாய்வழியாக பிராணன் போயிருக்கிறது என்றால் அவர் உடல் தைலமிட்டு பாதுகாக்கும் போது வாய்மட்டும் திறந்தபடி இருக்கும் இப்படி பல பிணங்கள் இந்த மியூசியத்தில் உள்ளன.

ஓர் பெண், குழந்தைபெற்ற நிலையில் மரணமடைந்து இருக்கின்றாள். அதேநிலையில் அவளது உடல் இந்த மியூசியத்தில் காணப்படுகிறது பிறந்து இறந்த குழந்தையின் பிணமும் காணப்படுகிறது.ஓர்பெண் இரவு உடையை அணிந்து கொண்டிருந்த நிலையில் இறந்தாள். அவளது உடலும் அப்படியே காட்சியளிக்கிறது.

முழுமையாக உயிர்போகாத நிலையில் புதைக்கப்பட்ட பிணங்களும் இங்குகாணப்படுகின்றன உடல் அடக்கம் செய்யப்பட்டபோதுஉயிர்இறந்துஇருக்கிறது அடக்கம் செய்யப்பட்ட பின்னர் மூச்சுத் திணறித்தான் உயிர் போயுள்ளது என்பதற்கான அறிகுறிகள் சவப்பெட்டியில் தென்படுகின்றன. மனிதன் வெளியே வரப்போராடி சவப்பெட்டியை உடைத்தது, கீறியது போன்ற சுவடுகள் மியூசியத்தில் உள்ளசில சவப்பெட்டிகளில் காணப்படுகின்றன.

தகவல்
மு. உமையகௌரி
ஆண்டு 11
யாழ்.இந்து மகளிர் கல்லூரி

# இரு நாடகங்கள் - ஒரு பார்வை

## ★ மானுடம் வெல்லும்வரை

## ★ எந்தையும் தாயும்

### மானுடம் வெல்லும் வரை

முதலில் மேடையேற்றப் பட்ட மானுடம் வெல்லும் வரை நாடகத்தில் பாடசாலைப் பிள்ளைகளின் விளையாட்டு விருப்பத்தைக் கருத்திற் கொண்டு அவர்களது உடல் வயதுக்கும், உள வயதுக்கும் ஏற்புடைய வகையில் பல சம்பவங்கள் பின்னப்பட்டுள்ளன.

திரை விலகியதும் புதுமை முயற்சியாக கண் ஊனமுற்ற ஒரு நடிகை முனைப்பாக நின்று பாடி நடிப்பதுடன் நாடகம் ஆரம்பமாகிறது. ''இதுவும் ஒரு பாத்திரமாக இருக்கலாமோ?'' - இப்படிப் பலரின் பார்வைக்குத் தோன்றியிருக்கலாம், இந்த நாடகத்தில் நடித்தவர்களின் மெய்ப்பாடுகளிலிருந்து பாத்திரம் ஏற்று நடிப்பவர் கண்பார்வையற்றவர் என்பது சில நிமிடங்களிலேயே பார்வையாளர்களுக்குத் தெரிய வருகிறது. நாடக விஷயங்களில் நாம் கல்வி ரீதியான சிறப்பியல்புகளை ஏற்றுக் கொள்ளத் தயார் என்றால், பாடத்தோடு இணைந்த செயற்பாடுகளில் சகபாடிகள் ஒருவரில் ஒருவர் தங்கியிருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் வகையில் பாத்திரத் தெரிவில் கண்பார்வை அற்றவரையும் இணைத்துக் கொள்வது பாராட்டுதற்குரியது.

சமகாலச் சம்பவங்களுக்குப் பாடசாலை அரங்கை ஒரு உதாரணமாக எடுத்தால், மானுடம் வெல்லும் வரை நாடகத்தினையும் உதாரணமாகக் காட்ட முடியும்.

சமீபத்திய ஆண்டுகள் வரை ஒரு பரவலான தாக்கம் ஏற்படுத்தி வரும் சம்பவங்களும், இன்னோரென்ன நிகழ்வுகளும் இந்த நாடகத்தில் சேர்க்கப்பட்டுள்ளன வகுப்பறைப் பின்புறத்தில் சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் இடம் பெறும் இந்த நாடகத்தில் சமகால நிகழ்வுகள் பலவற்றை அள்ளிச்சேர்ப்பது ஒரு கடினமான காரியம் தான் நாடகத்தில் சம்பவப் பின்னல்கள் சற்று ஏறுமாறாக இலவசக் கல்வி முதல் 'சைக்கிள் வியாபாரம்' வரை தொட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. சுட்டமண்ணும் சுடாதமண்ணும் போல சம்பவங்கள் அமைந்துள்ளன. இந்த நாடகத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்கள் சிக்கல் நிறைந்த சம்பவங்களையும், சூழ்நிலைகளையும் அபரிமிதமாகக் காட்டுவதைத் தவிர்த்திருக்கலாம்.

கதாநாயகன் அல்லது அந்த அளவிற்கு முக்கியமான பாத்திரங்கள் நாடகத்தில் இல்லை மேடையில் தோன்றும் பத்துப்

உயிர்த்துடிப்புடனும், விறுவிறுப்புடனும் நடிப்பது ஒரு அருமையாக இருக்கிறது. பயிற்சியோ என்னவோ, உடல் தளர் நிலையில் இருப்பதால் அநாயாசமாக நடித்துள்ளார்கள் மற்றும்படி பாடசாலை அரங்கென்றால்ஏதோசிறு பிள்ளைகள்சமாசாரம்என்றுநினையாமல், இந்த நாடகத்தில் மேடை முற்றாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. நடிகர்களின் மேடை அசைவு (stage movem-ent) திருப்திதருவதாக இருக்கிறது. பெரும்பாலும்பத்துப்பேர் ஒரே முறையில் மேடையில் தோன்றும் இந்த நாடகத்தில் பெரும்பாலோர் நின்று கொண்டோ, மேசை மீது நிற்கும் போதோ மற்றும் நாற்காலியில் இருக்கும் போதோ இடவசதி இல்லை என்பது இந்த

காட்டுகிறது. மேலும், சாதாரண நிலையிலுள்ள மாணவர்களின் தேவைகள் அலட்சியப்படுத்தப் படுவது மாதிரி. நாடகப் பிரதியை எழுதியவர் சமகாலச் சம்பவங்களில் தீவிரமான ஆர்வமுடையவராயிருந்த போதிலும், எதார்த்தத்துக்குப் பாதி வழியிலேயே நிற்கிறார்.

இன்றைய வரலாற்று நிர்ப்பந்தங்கள் பாடசாலை மாணவர்—மாணவிகளிடையே ஏற்படுத்தியுள்ள தாக்கங்கள் இந்த நாடகத்தில் விரவிக் காணப்படுகின்றன. பெரும்பாலும் —

★ பாடசாலை கதவுகளைதிறந்து அகதிகளை ஏற்றுக் கொண்டமை. அதனைச் சகிக்க முடியாத மாணவி.

★ மகளை வெளிநாட்டுக்கு

> அகதிகள் புனர்வாழ்வு நிதிக்காக கடந்த சனிக்கிழமை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி அரங்கில் குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் மற்றும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி தமிழ் மன்றத்தினரின் மானுடம் வெல்லும்வரை ஆகிய இரு நாடகங்களை யாழ் லயன்ஸ் கழகம் வழங்கியது.

நாடகத்தில் முற்றாகத் தவிர்க்கப்பட்டுள்ளமை ஒரு நல்ல உதாரணம்.

மனப்பாடம் செய்யும் இயந்திரமாக நடிகர்களைப் பாவிக்கும் மனப்பான்மை குறைவாகவே காணப்படுகிறது என்றாலும் சொல்லாடலில் ஆங்கிலப்பேச்சின் குணம் இடையிடையே தொக்கி நிற்கிறது. இந்தப் படைப்பு உருவாக்கிய சிறப்புச் சூழலில்—வகுப்பறையில், நடிகர்கள் சாதாரண வாக்கிய அமைப்புக்களை வைத்துச்சொல்லாடி உண்மையில் வெளிப்பாட்டை நோக்கிச் செல்லும்போது, இடையிடாக உயர்குளாத்தினரின் தின்பண்டங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை வாக்கியத்தில் செருகுவது பொதுமைப் படுத்த முடியாததும், எல்லாப் பாடசாலைச் சூழலுக்கும் பொருந்தாத ஒரு காரியமாகும். சொல்லாடல்,

அனுப்ப விரும்பும் பெற்றோர், பந்தங்களையும், மண்ணையும் விட்டு வெளிநாடு செல்ல விரும்பாத மகள்.

★ நாற்பதுகளில் ஏற்பட்ட இலவசக் கல்வி. இன்றைய கல்விச் செலவு.

★ பாடசாலை உணவகம், தின்பண்டங்கள்.

★ பரீட்சைகளைப் பின்போடுதல், விசேட பரீட்சை, பல்கலைக் கழக நுழைவு,

**-மதன்-**

ரியூஷன்.

★ பொருளாதாரத் தடை, சைக்கிள் வியாபாரம்.

★ குண்டு வீச்சு ஆகிய இன்னோரன்ன சமபவங்கள்.

இந்தச் சம்பவங்களில் சில

கள், தின்பண்டங்கள் தொடர்பான சொல்லாடல்கள் வெளிநாட்டுக் கல்விவாய்ப்புகள் ஆகியன ஓர் பிரக்ஞையற்ற உத்தியாக, நாடகப் போக்கைத் தூக்கி நிறுத்துவதற்காக உபயோகிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு மாணவனின் கல்விக்கான வருடாந்த மொத்தச் செலவு 5000ரூபாவுக்கும் சற்று அதிகம் என்றுபட்டியல்போட்டுக் காட்டுவதிலிருந்து டொனேஷன் என்றபெயரில்பாடசாலைபெற்றோரிடமிருந்து கறக்கப்படும் நன்கொடை, தனியார் பள்ளிக் கூடங்களில் அறவிடப்படும் மாதாந்தப்பணம், விழாக்கள், நிகழ்ச்சிகளுக்கென அவ்வப்போது பெறப்படும்பணம் ஆகியவற்றைப் புறந்தள்ளி வைத்திருப்பது மாயத்தோற்றத்தைத்தருகிறது. ''தமிழ் ரியூஷன் மாஸ்டர் விடுகிற பகுடிக்குக் காசு கொடுத்துப் படிக்கலாம்'' என்று நையாண்டியாகப்பேசி அழுத்தம் கொடுத்திருப்பதைத் தவிர்த்திருக்கலாம்

ரியூஷன், தனியார்கல்வி நிறுவனங்கள், தனியார் பாடசாலைகள், அரச பாடசாலைகள் ஆகியவற்றின் கூட்டுக் கலவையாகவே எமதுகல்வி இன்று அமைந்துள்ளது. கல்வி நிறுவனங்கள் பலநோக்கு உடையன என்றாலும் சுமார் 15 16வயது மாணவிகளைக்கொண்டு கல்வியில் பிரச்சினையை அணுகுவது அவர்களது உளவயதுக்கு அப்பாற்பட்ட விஷயமாகும். பொதுவாக நாடகத்தில் எதிர்பார்க்கப்படும் சத்தியம் இந்த நாடகத்தில் சித்தரிக்கப்படும் பல சம்பவங்களில் இல்லையென்றே கூறவேண்டும். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் இந்த நாடகம் தரும் தரிசனம் தெளிவில்லாமல்தான் இருக்கிறது.

### எந்தையும் தாயும்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகக்கதையில் வெளிநாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு அன்பிற்கு ஏங்கும் தந்தையையும், அதே உணர்ச்சிச் சிக்கலில் உள்ள தம்பதியரையும் சித்தரிக்கிறார். இந்தஇரண்டு நிலைகளையும்விட இடைநிலையாக மண்ணிலிருந்து ஆணிவேரை அறுக்க விரும்பாது ஊரில் வாழும் குடும்பமும் சித்தரிக்கப்படுகிறது. குறியீடு மூலம்

குப்பிள்ளைகளைஅனுப்பிவிட்டு நம்பிக்கையிழந்த நிலையில் உள்ளவர்களைக் குறிப்புடன் காட்டுகிறது.

குழந்தை சண்முகலிங்கம் தானே நாடகப்பிரதி எழுத்தாளனாகவும், நெறியாளனாகவும் இணையும் கட்டத்தில எந்தையும் தாயும் சாத்தியமாகிறது. யாழ்ப்பாணத்தில் சாதாரண மனித அனுபவத்தில் நிகழ்பவற்றைக் கருப்பொருளாககொண்டு துடிப்பு நிறைந்த ஒரு படைப்பை உருவாக்கியிருக்கிறார். குழந்தை

கூடாகப்பார்க்கும் உண்மை நடைமுறைகளை முழுக்க முழுக்கக்கொண்டதாக அவரின் எந்தையும் தாயும் அமைந்துள்ளது.

நாடகத்தில் குணசித்திர மோதல்கள் இல்லை. நாடகப் பாத்திரங்கள் எந்த விதத்திலும் தரங்கெட்ட மனிதர்களாகச் சித்தரித்துக் காட்டப்படவில்லை. சமுதாயச் சீர்திருத்தமோ அல்லது தத்துவ நோக்கிலோ எந்தக் கருத்தும் நாடகத்தில் இடம் பெறவில்லை.

குரிய பேச்சு நடை பாத்திரங்களின் வாயிலாகத் தொனிக்கிறது. ஆனால் இந்த நடையிலுள்ள பலவீனம், உணர்ச்சிக்குரிய முக்கியமான(Serious) இடங்களில் அதன் முக்கியத்துவத்தை குறைத்து விடும் தன்மையை உணர முடிகிறது.

இதற்குச் சிறந்த உதாரணமாகப் பெரியையா செத்த கையோடு ''பிணத்தை எம்பாம் பண்ண இது என்ன மார்க்கோசின் சடலமோ?'' என்று குரல் எழுப்புவது தாக்

## திலீபன் உன்னைத் தொடர்ந்து......

திலீபன்
நீ உயிரோடு இருக்கும் போதே உன்
இரங்கல் கூட்டம் நடந்தது
உன்னை வளைத்து மக்கள் கடல்
எங்களை விட்டுப் போகிறாய்
எங்கே அண்ணா போகிறாய்?
ஒரு கவிதை -நீ உயிரோடு உட்
கார்ந்திருந்த மேடையில் ஒலிக்கிறது
நீ சிரிக்கிறாய்
மக்கள் அழுகிறார்கள்
உன் சாவு எங்களுக்கு உயிர் தரும்
ஒரு தங்கை மேடையில் முழங்குகிறாள்
கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் கரைந்து
கொண்டிருக்க நீ மீண்டும் சிரிக்கிறாய்
மக்கள் அழுகிறார்கள்
திலீபன் ...
நீ உயிரோடு இருக்கும் போதே உன்
இரங்கல் கூட்டம் நடந்தது
உலகத்தின் கண்களை திறக்க நீ
உன் கண்களை மூடினாய்
திலீபன்... உன்தியாகம் எதிரிகள்
முன் ஓயாத புயலாய் என்றைக்கும் வீசும்
நீ உன் சாவினால் வளர்த்த நெருப்புத்
தானே இன்று பாரதப் படையை நீறாக்கிக்
கொண்டிருக்கிறது
இந்தியப்படை விடுதலைப் புலிகளைக்
கைது செய்யும் போது பாய்ந்து
''சயனைட்'' இருக்கிறதா என்று
பார்த்து-இருந்தால் பறித்து
எடுக்கிறதாம்
சயனைட்டைச் சாப்பிட்டால் தான்
சாவு வருமா - சாப்பிடாமல் இருந்தே
எங்களுக்கு சாகத்தெரியும் என்று
நீ அவர்களுக்கு சவால் விட்டாய்
பிரபாகரன் வளர்த்த புலியே!
உன் பின்னால் எத்தனை பேர்
எத்தனை பேர் நீபோன இடத்துக்கு
வந்து விட்டார்கள் பார்...
நீ ஒரு நீரோட்டம் - உன்னோடு
ஒரு தலைமுறையே இழுபட்டு
வரும்
உன் உண்ணாவிரதத்தின் பின்பு
தமிழீழத்துப் பெண்கள் தியாகம்
செய்யவே பிள்ளைகளைப் பெறு
கிறார்கள்
மேடையில் தமிழீழத்திற்காகச்
சாவேன் என்று பேசியவன் இருக்
கிறான்- நீ மேடையில் தமிழீழத்
திற்காகவே மரணித்தாய்
உன் முடிவினால் தமிழீழம்
புத்துயிர் பெற்றது 'விடுதலை'
எத்தனை பெரியது என்பதற்கு
உன் மரணம் ஒரு விளக்கம்
திலீபன்...
நீ தமிழீழ விடுதலைப் போராட்டத்
தின் தொடர்சக்தி
'எல்லாம் முடிந்து விட்டது என்று'
பலரும் ஓய்ந்த நேரத்தில் ஒன்றும்
முடிந்து விடவில்லை என்று காட்டிய
வெளிச்சம்
அமைதியான காலம் ஒரு விடுதலைப்
போராட்ட காலத்தில் இல்லை என்பதை
நீ அமைதியான உன்சாவினால்
நிரூபித்தாய்.
இந்தியா உணவுப் பொட்டலம்
போட்ட காலத்தில் உண்ணாவிரதம்
இருந்த உன் சாவு எங்கள் விடுதலைப்
பசிக்கு என்றைக்கும் உணவாகும்
எவ்வளவு பெரிய ஆற்றலையும் நிமிர்ந்து
மோதும் பெரிய சக்தி உன்னால்
எங்களுக்கு தரப்பட்டது நாங்கள்
பயன்படுத்துகிறோம்.
இந்திய போர்விமானங்கள் புலிகளை
அழிக்க முடியாமல் வெட்கத் தோடு
இங்கே தரையிறங்குகின்றன.
திலீபன் உன் இலட்சியத்திற்கு
உன் மரணத்தின் பின்னும் வெற்றி
தேடித்தருகின்றாய்
உன்னை நாங்கள் பின்பற்றுவோம்
தமிழீழ மண்ணில் எதிரிகளின்
இரும்புச் செருப்பின் ஓசை
கேட்கும் போதெல்லாம் ..
இளைஞர்களைப் போருக்கு அழைக்கும்
விடுதலைப் புலிகளின் துண்டறிக்
கைகள் காற்றில் பறக்கும் போதெல்
லாம்
நெடிய பனைமரங்களின் கீழ்
உட்கார்ந்து எமது விடுதலை
பற்றி நாங்கள் பேசும் போதெல்லாம் ..
நாங்கள் உன்னை நினைப்போம்
நாங்கள் நீ ஆவோம்

-நன்றி:தமிழீழம்

பின்புறத்தில் சுமார் நாற்பத்தைந்து நிமிடங்கள் இடம் பெறும் இந்த நாடகத்தில் சமகால நிகழ்வுகள் பலவற்றை அள்ளிச்சேர்ப்பது ஒரு கடினமான காரியம் தான் நாடகத்தில் சம்பவப் பின்னல்கள் சற்று ஏறுமாறாக இலவசக் கல்வி முதல் 'சைக்கிள் வியாபாரம்' வரை தொட்டுக் காட்டப்பட்டிருக்கின்றன. சுட்டமண்ணும் சுடாதமண்ணும் போல் சம்பவங்கள் அமைந்துள்ளன. இந்த நாடகத்திற்குப் பிள்ளையார் சுழி போட்டவர்கள் சிக்கல் நிறைந்த சம்பவங்களையும், சூழ்நிலைகளையும் அபரிமிதமாகக் காட்டுவதைத் தவிர்த்திருக்கலாம்.

கதாநாயகன் அல்லது அந்த அளவிற்கு முக்கியமான பாத்திரங்கள் நாடகத்தில் இல்லை மேடையில் தோன்றும் பத்துப் பேரும் சமபங்கேற்று நடித்திருக்கின்றார்கள். நடிப்பில்பங்கேற்றவர்கள் மேசை நாற்காலிகளில் ஏறியும் இறங்கியும் க்கப்பட்டுள்ளமை ஒரு நல்ல உதாரணம்.

மனப்பாடம் செய்யும் இயந்திரமாக நடிகர்களைப் பாவிக்கும் மனப்பான்மை குறைவாகவே காணப்படுகிறது என்றாலும் சொல்லாடலில் ஆங்கிலப்பேச்சின் குணம் இடையிடையே தொக்கி நிற்கிறது. இந்தப் படைப்பு உருவாக்கிய சிறப்புச் சூழலில்—வகுப்பறையில், நடிகர்கள் சாதாரண வாக்கிய அமைப்புக்களை வைத்துச்சொல்லாடி உண்மையில் வெளிப்பாட்டை நோக்கிச் செல்லும்போது, இடையிடாக உயர்குளாத்தினரின் தின்பண்டங்களைக் குறிக்கும் ஆங்கிலச் சொற்களை வாக்கியத்தில் செருகுவது பொதுமைப் படுத்த முடியாததும், எல்லாப் பாடசாலைச் சூழலுக்கும் பொருந்தாத ஒரு காரியமாகும். சொல்லாடல், அதனுள் அடங்கியிருக்கும் பொருள் சாதாரண உண்மைகளை நிகழ்வுகளுடன் இணைக்காமல் விலகிப் போவதையே

றோர், பந்தங்களையும், மண்ணையும் விட்டு வெளி நாடு செல்ல விரும்பாத மகள்.

★ நாற்பதுகளில் ஏற்பட்ட இலவசக் கல்வி. இன்றைய கல்விச் செலவு.
★ பாடசாலை உணவகம், தின்பண்டங்கள்.
★ பரீட்சைகளைப் பின்போடுதல், விசேட பரீட்சை, பல்கலைக் கழக நுழைவு,

-மதன்-

ரியூஷன்.
★ பொருளாதாரத் தடை, சைக்கிள் வியாபாரம்
★ குண்டு வீச்சு ஆகிய இன்னோரன்ன சமபவங்கள்

இந்தச் சம்பவங்களில் சில திறமையாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. ஆனால் முனைப்பான சில சம்பவங்கள், குறிப்பாக இன்றைய கல்விச் செலவினங்

அப்பாற்பட்ட விஷயமாகும். பொதுவாக நாடகத்தில் எதிர்பார்க்கப்படும் சத்தியம் இந்த நாடகத்தில் சித்தரிக்கப்படும் பல சம்பவங்களில் இல்லையென்றே கூறவேண்டும். ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இந்த நாடகம் தரும் தரிசனம் தெளிவில்லாமல்தான் இருக்கிறது.

### எந்தையும் தாயும்

குழந்தை ம. சண்முகலிங்கத்தின் எந்தையும் தாயும் நாடகக்கதையில் வெளிநாட்டுக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு அன்பிற்கு ஏங்கும் தந்தையையும், அதே உணர்ச்சிச் சிக்கலில் உள்ள தம்பதியரையும் சித்தரிக்கிறார். இந்த இரண்டு நிலைகளையும்விட இடைநிலையாக மண்ணிலிருந்து ஆணிவேரை அறுக்க விரும்பாது ஊரில் வாழும் குடும்பமும் சித்தரிக்கப்படுகிறது. குறியீடு மூலம் மையக்கருத்துக்கு அழுத்தம் தரப்படுகிறது நீண்டு வளர்ந்த கள்ளிமரக்கிளையொன்று தனியாகநிற்பது வெளிநாட்டுகளுக்

நீ ஒரு நீரோட்டம் - உன்னோடு
ஒரு தலைமுறையே இழுபட்டு
வரும்
உன் உண்ணாவிரதத்தின் பின்பு
தமிழீழத்துப் பெண்கள் தியாகம்
செய்யவே பிள்ளைகளைப் பெறு
கிறார்கள்

நெடிய பனைமரங்களின் கீழ்
உட்கார்ந்து எமது விடுதலை
பற்றி நாங்கள் பேசும் போதெல்லாம்..
நாங்கள் உன்னை நினைப்போம்
நாங்கள் நீ ஆவோம்

-நன்றி: தமிழீழம்

குப்பிள்ளைகளைஅனுப்பிவிட்டு நம்பிக்கையிழந்த நிலையில் உள்ளவர்களைக் குறிப்புடன் காட்டுகிறது.

குழந்தை சண்முகலிங்கம் தானே நாடகப்பிரதி எழுத்தாளனாகவும், நெறியாளனாகவும் இணையும் கட்டத்தில் எந்தையும் தாயும் சாத்தியமாகிறது. யாழ்பபாணத்தில் சாதாரண மனித அனுபவத்தில் நிகழ்பவற்றைக் கருப்பொருளாககொண்டு துடிப்பு நிறைந்த ஒரு படைப்பை உருவாக்கியிருக்கிறார். குழந்தை சண்முகலிங்கத்தின்பாணிசற்று வித்தியாசமான அணுகுமுறையைக் கொண்டது. நாம் கண்கூடாகப்பார்க்கும் உண்மை நடைமுறைகளை முழுக்க முழுக்கக்கொண்டதாக அவரின் எந்தையும் தாயும் அமைந்துள்ளது

நாடகத்தில் குணசித்திர மோதல்கள் இல்லை. நாடகப் பாத்திரங்கள் எந்த விகத்திலும் தரங்கெட்ட மனிதர்களாகச் சித்தரித்துக் காட்டப்படவில்லை சமுதாயச் சீர்திருத்தமோ அல்லது தத்துவ நோக்கிலோ எந்தக் கருத்தும் நாடகத்தில் இடம் பெறவில்லை.

நாடகத்தின் தொடக்கத்தில், நாடகத்தை அறிமுகப்படுத்தும் வகையில் எந்தையும் தாயும் என்ற சுப்பிரமணிய பாரதியின் பாடலுடன் நாடகம் ஆரம்பமாகிறது. பாத்திரங்கள் பெரும்பாலான மனிதர்களுக்குக் கிடைத்த வாழ்வை அப்படியே ஏற்றுக் கொள்பவர்கள் சுவைபட வருவனவற்றைத் தொகுத்துக் கூறும் போது (சம்பவங்களில் மாததிரம்) உண்மை நிகழ்வுகளோடு குறுக்கீடு இல்லாமல் குழந்தை சண்முகலிங்கம் விலகி நிற்கிறார். ஆனால் சொல்லாடலின் போது சண்முகலிங்கத்தின் சுய ஆளுமை இந்த நாடகத்தில் வெளிக்காட்டப் படுகிறது நையாண்டித் தொனி கலந்த இவருக்குரிய பேச்சு நடை பாத்திரங்களின் வாயிலாகத் தொனிக்கிறது. ஆனால் இந்த நடையிலுள்ள பலவீனம், உணர்ச்சிக்குரிய முக்கியமான (Serious) இடங்களில் அதன் முக்கியத்துவத்தை குறைத்து விடும் தன்மையை உணர முடிகிறது.

இதற்குச் சிறந்த உதாரணமாகப் பெரியையா செத்த கையோடு ''பிணத்தை எம்பாம் பண்ண இது என்ன மார்க்கோசின் சடலமோ?'' என்று குரல் எழுப்புவது தாக்கத்தை ஏற்படுத்தவில்லை. பல சந்தர்ப்பங்களில் பாத்திரங்கள் தங்கள் உரையாடல்களுக்கு பகுடிச் சாயம் பூசி ஆர்ப்பாட்டம் பண்ணுகிறார்கள் இது நாடகத்தினைக் கொச்சைப் படுத்திவருகிறது.

பிள்ளைகள் அனைவரையும் வெளிநாடுகளுக்கு அனுப்பிவிட்டுக் கொள்ளி வைக்கக் கூட வாரிசு இல்லாமல் தவிக்கும் பாத்திரத்தில் நடிக்கும் பிரான்சிஸ் ஜாம் இயல்பாகவே நடித்திருக்கிறார். ஒரு சில சந்தர்ப்பங்களில் அவர் நடிப்பும் சரிந்து விடுகிறது வார்த்தைகள் அர்த்தங்களை எவ்வளவு கொச்சைப்படுத்தி விடுகின்றன. கடிதம்எப்போது வரும் என்ற அங்கலாய்ப்

( 5ஆம் பக்கம் பார்க்க )

# இனியும் ஏன் சந்திரப் பயணம்?

மனித சமுதாயம் முற்றிலும் பூமி எனும் கோளின் மடியிலேயே மட்டும் தவழ்ந்து கொண்டிருக்கும் காலம் முடியும் தறுவாயிலிருக்கிறது- புவிமேற்பரப்பிலே சீவிக்கும் மனித சமுதாயத்தின் இந்த குழந்தைப் பருவம் 20-ம் நூற்றாண்டின் இறுதியில் நிச்சயம் முடிவடைந்துவிடும்-21-ம் நூற்றாண்டிலே, இப்பூமியைவிட்டு நீங்கி சந்திரன், செவ்வாய், வெள்ளி போன்ற பிறகோள்களிலும் பலமனிதர்போய்க்குடியேறத் தொடங்கி விடுவார்கள்- இக்கோள்களில் மனித சமுதாயங்கள் தலை முறைகளாகத் தொடர்ந்து வாழ்ந்து பெருகுவதற்கான சாத்தியக் கூறுகளும் அடுத்த நூற்றாண்டிலே படிப்படியாகத் தோன்றும்-

இந்நூற்றாண்டின் மத்தியில் அமெரிக்க, சோவியத் விஞ்ஞானிகள் சந்திரனிலிருந்து மண்ணை எடுத்து வந்தனர்- சந்திரனிலிருந்து கொண்டு வரப்பட்ட இம்மண்ணின் பெளதிக இரசாயனத் தன்மைகளை விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகிறார்கள்- இந்த மண்ணை இரசாயனக் கதிரியக்கப் பகுப்புக்கு உட்படுத்துவதால் சந்திரனின் வயதைத் தீர்மானிக்கக் கூடியதாகவுள்ளது- இந்த மண் பூமியின் மேற்பரப்பிலுள்ள மண் வகைகளுடன் ஒப்பிடக்கூடியதாயிருப்பினும், குறோமியம் எனும் மூலகத்தைச் சிறிது அதிகமாகக் கொண்டிருக்கிறது- இச்சந்திர மண்ணில் பல் வேறு விதைகளை முளைக்கச் செய்தும் பரீட்சித்திருக்கிறார்கள்-

பூமியிலிருப்பது போல் சந்திரனில் நீர் வளமோ அல்லது வளிமண்டலப் போர்வையோ இல்லை- உயிர் வாழ்வதற்கு அத்தியாவசியமான வளியும் நீரும் இன்மையால் சந்திரனின் மேற்பரப்பில் புவியிற் பரந்துள்ள தாவரங்கள் விலங்குகள் போன்ற உயிரினங்கள்பரிணமித்துக்கூர்ப்படையக் கூடிய சூழ்நிலை இல்லாமற் போய்விட்டது- சந்திரனின் மேற்பரப்பு முழுவதும் வெறும் மலைத் தொடர்களும் பரந்த வெளிகளுமுடைய ஓர் உயிரற்ற நிசப்தமான பாலைவனமாகக் காட்சியளிக்கிறது- பூமியிற் போலல்லாமல்,

உரும்பராய்
**திருவன்**

அங்கே பெரிய வான்கற்கள், இடையிலே ஒரு வளி மண்டலத்தின்உராய்வினால் சூடாகி எரிந்து சாம்பராகிப் போகாமல், விண்வெளியிலிருந்து அப்படியே வந்து வீழ்கின்றன- அப்போது தடால் என்ற கோர சப்தம் கேட்பது இல்லை- ஏனெனில் அங்கே ஒலியலைகள் பரவுவதற்கு வளியூடகம் இல்லை- வானக்கற்கள் அடிக்கடி வந்து தாக்கிச் சிதறுவதால்தான் சந்திரனில் மணல் உண்டாகியிருக்கிறது- நீரூற்றுகளும் காற்றோட்டமும் இல்லாதபடியால் புவியிலேற்படும் மண்ணரிப்பு அங்கே நிகழ்வதில்லை- ஆகவே அங்கேயுள்ள கூர்மையான மலைச்சிகரங்கள் தேய்ந்து போகாமல் ஓங்கி நிமிர்ந்து நிற்கின்றன. இமயத்திலும் பார்க்க உயர்ந்த மலைகள் அங்கே பல உண்டு என தெரிவிக்கப்படுகிறது-

பூமியிலிருந்து சந்திரனின் அழகைப் பருகி காதலைப்பற்றிப் பாடிய கவிஞர் சந்திரனின் மேற்பரப்பில் நின்று அங்கேயுள்ள கொடூரமான சூழலைப் பார்த்தார்களாயின் காதலைப் பற்றிப் பாடமாட்டார்கள்- இப்படியானவொரு கொடூரமானவரண்ட உலகில் மனிதர் பெருவாரியாகவும் நிரந்தரமாகவும் குடியேறுவது சாத்தியமானதாகத் தோன்றவில்லை- எனினும், சந்திரனில் குறைந்தளவில் தற்காலிகமாகவேனும் குடியேறுவதற்கான முயற்சிகள் கைவிடப்படும் என்று சொல்வதற்கில்லை- பூமியிலிருந்து தமக்கு தேவையான வளியையும், நீரையும் மனிதர் சந்திரனுக்கு கொண்டு செல்வார்கள்- அங்கே வானக் கற்கள் தாக்காத பாதுகாப்பான மலைச் சாரலிலே குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்படும்- இவை சூரிய ஒளி புகக்கூடிய ஒரு வகை உடையாத கண்ணாடியாலான மிக விசாலமான வில் மண்டப அடைப்புகளினால் மூடப் பட்டிருக்கும்- ஒரு சிறு உலகமென சொல்லத்தக்க இந்த மண்டபத்துக்குள்ளே சுவாசிப்பதற்கு செயற்கை வளிமண்டலமிருக்கும்- அருந்துவதற்குச் செயற்கை நீர் நிலைகளுமிருக்கும்- தாம் சுவாசித்து வெளிவிடும் கரியமிலவாயுவை மீண்டும் பிராணவாயுவாக மாற்றுவதற்கும் உணவுக்காகவும் தாவரங்களை வளர்ப்பார்கள்- உணவுக்காக மீன்களையும் நீர் நிலைகளில் வளர்ப்பார்கள்- கழிவுப் பொருள்கள் உரமாகப் பாவிக்கப்படும்- இவ்வாறு, புவியிலே விலங்கினமும் தாவரவினமும் ஒன்றுக்கொன்று இன்றியமையாது சீவிப்பதைப் போன்றவோர் உயிர் வட்டச் சமநிலை சந்திரனிலும் பேணப்படலாம்.

ஆனாலும் சந்திரனில் குடியேறுவது தான் சந்திரப் பயணங்களின் இறுதிக் குறிக்கோளாயிராது- அங்கே பெரிய வானியல் அவதான நிலையங்கள் நிறுவப்படும்- வளிமண்டலமில்லாதபடியால் அங்கே இருந்து நோக்கும்போது வான வெளியிலுள்ள கோடான கோடி நட்சத்திரங்கள் (உடுக்கள்) தொலைக்காட்டியில் மிகவும் தெளிவாகத் தோன்றும்— பூமியிற் புலனாகாத புதிய உடுத் தொகுதிகள் கண்டு பிடிக்கப்படும்- வானவியலில் பெருவளர்ச்சி ஏற்பட்டு பிரபஞ்சத்தைப் பற்றிய பல உண்மைகள் தெளிவாகிவிடும்-

மேலும் பூமியைப் போலச் சூரியனைச் சுற்றிச் செல்லும் பிறகிரகங்களை சந்திரனிலிருந்து தொலைகாட்டிகள் மூலம் இன்னும் நுணுக்கமாக அவதானிக்கலாம்-பூமியைப்போல் நீரும் வளியுமுள்ளவையான செவ்வாய்க் கிரகத்திற்கும் வெள்ளிக்கிரகத்திற்கும் மனிதன்பயணமாவதற்கு சந்திரன் ஓர் ஏவுதளமாக அமையக் கூடும்- பூமியிலும் பார்க்க மிகக்குறைந்த ஈர்ப்புடையதான படியால் சந்திரனிலிருந்து பிரமாண்டமான றொக்கெட்டுகளை (வானக் கப்பல்களை) உந்திச் செலுத்துவது சுலபமாயிருக்கும்- பூமியிலிருந்து ஏவுவதிலும் பார்க்க சந்திரனிலிருந்து இன்னும் கூடிய உந்து வேகத்துடன் அவற்றை ஏவலாம்-

ஆகவே, கோடிக்கணக்கான கிலோமீற்றர் தொலைவிலுள்ள கிரகங்களுக்கு செல்வதற்கான காலம் குறைக்கப்படலாம், இப்பெரிய வானக் கப்பல்களை அமைப்பதற்கு உதிரிப்பாகங்கள் முதலில் பூமியிலிருந்து சந்திரனுக்கு படிப்படியாகக் கொண்டு செல்லப்படும், ஆகவே சந்திரமேற்பரப்பில் வானியல் அவதான நிலையங்கள் மட்டுமன்றி தூரக்கிரகப் பயணங்களுக்கான ஏவுதளங்கள் நிறுவப்படும்:

சந்திரப் பயணங்களுக்கு இன்னுமொரு விஞ்ஞானரீதியன குறிக்கோள் சந்திரவியல் ஆய்வு ஆகும். சந்திரனின் புற அமைப்புடன் அதன் உள்ளமைப்பையும் ஆராய்வதற்கான அகழ்வுக் கருவிகள் சந்திரனில் நிறுவப்படும். மனிதர் சந்திரனின் மேற்பரப்பு முழுவதும் உலாவி அதன் மலைகளின் மீது ஏறி பள்ளத்தாக்குகளில் இறங்கி சுரங்கங்களுக்குள் நுழைந்து பல ஆய்வுகள் நிகழ்த்துவர்- விஞ்ஞானக் கதைகள் எழுதிய H- G- உவெல்ஸ் என்பவர் சந்திரனின் உள்ளமைப்பு போறையானதெனவும் அங்கே வளியும் நீரும், விசித்திரமான

(5ஆம் பக்கம் பார்க்க)

## கணவனின் சடலத்தை குளிர்காய வைக்கும் பெண்

புதைகுழியில் இருந்து தனது கணவனின் சடலத்தை மீட்டெடுத்து தினமும் குளிர்காய வைக்கிறாளாம்பெண்ணொருத்தி.

மேற்படி சம்பவம் உகண்டாவில் நடைபெறுகிறது இப்பெண் தனது கணவனின் பூதவுடலை தினமும் காலையில் புதைகுழியில் இருந்து தோண்டியெடுத்து கணிசமான அளவு நேரம் சூரிய வெளிச்சத்தில் வைத்து விட்டு பின்னர் மீண்டும் புதைகுழியில் போட்டு மூடிவிடுகிறாள்.

ஒரு வருடத்திற்கு முன்னர் காலமாகி புதைக்கப்பட்ட கணவன் தனது கனவில் 'தோன்றி' புதைகுழியில் மிகவும் குளிராக இருக்கிறது. என்னை தோண்டியெடுத்து சூடான சூழ்நிலையில் வையுங்கள்' என்று கவலையுடன் வேண்டுகோள் விடுத்ததாக அப்பெண் கூறவதாக 'ஸ்டார்' பத்திரிகை தெரிவித்தது

ஒவ்வொரு நாளும் சூரியன் உதயமாகும்போது கணவனின்சடலத்தை புதைகுழியில் இருந்து அப்பெண் தனது பிள்ளைகளின் உதவியுடன் எடுத்து சூரிய வெளிச்சத்தில் வைத்துவிட்டு பின்னர் புதைத்து விடுகிறாள்.

தலைநகர் கம்பாலாவில் இருந்து மேற்கே எண்பது மைல் தொலைவிலுள்ள மாலக்கே என்ற கிராமத்திலேயே இந்த விநோதமான சம்பவம் இடம்பெறுகிறது என்றும் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

# கொப்பேகடுவவின் இறுதி இலக்கென்ன?
# இராணுவ தலைமைப் பதவி மட்டும் தானா?

அடுத்த ஜனாதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் டென்சில் கொப்பேகடுவவை நியமிப்பது பற்றி ஆராயப்பட்டு வந்ததாகக் கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் அநாமதேயக் கடிதங்கள் தென்னிலங்கையில் விநியோகிக்கப்பட்டன- சிறிலங்கா ஜனாதிபதி கூட்டு நடவடிக்கைத் தலைமையகத்திலிருந்து அதிகாரங்களை முப்படைகளின் தளபதிகளிடம் மாற்றுவதற்காகத் தீவிரமாக ஆலோசித்துக் கொண்டிருந்த வேளையிலேயே இவ் அநாமதேயக் கடிதங்கள் வெளிவந்திருந்தன.

சிறிலங்கா ஜனாதிபதி அதிகாரங்களை மாற்றும் தனது திட்டத்தில் எந்த விதமான மாற்றத்தையும் செய்யவில்லை. கூட்டுப்படைத்தலைமையகத்திடம் இருந்து அதிகாரங்கள் மாற்றப்பட்டன- ஆனால் அப்போதைய வடமாகாணத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் அதிகாரங்களை மாற்ற முடியவில்லை- ஆரம்பத்தில் அதிகார மாற்றம் பிராந்தியத் தளபதிகளின் அதிகாரங்களை மட்டுப்படுத்தும், அல்லது இல்லாது ஒழிக்கும் என இராணுவ வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது இதன் பிரகாரம் வட பிராந்தியத் தளபதியான லெப் ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ யாழ் மாவட்டத் தளபதியாகப் புதிய நியமனம் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது- ஆனால் இறுதியில் அத்திட்டம் கைவிடப்பட்டது அதாவது இராணுவ அதிகார கட்டளையிடும் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியதே ஒழிய லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவில்லை.

இதேவேளை டென்சில் கொப்பேகடுவவைத் திருப்திப்படுத்தும் நோக்கிலும் சில அறிவிப்புக்களைக் காலம் முந்தியே சிறிலங்கா ஜனாதிபதி அறிவிக்க வேண்டியும் வந்தது. இவ் அறிவிப்புக்களின் படி 1993 ஆம் ஆண்டு ஜனவரியில் [illegible] எதையும் தெரிவிக்கவில்லை- ஆனால் அவரது இறுதி அபிலாசைகள் மிகவும் உயர்வானவை என்பதும், அதன் குறி சிறிலங்காவின் அதிஉயர் பதவி வரை இருந்திருக்கலாம் எனக் குறிப்பிட்டால் அதைத் திட்டவட்டமாக மறுத்துரைக்க முடியுமா? என்பது சந்தேகமே-

லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ இராணுவத்தின் அதியுயர் பதவியை எட்ட வேண்டும் என்று எண்ணம் கொண்டிருந்ததில் ஆச்சரியம் கொள்ள எதுவுமில்லை சிறிலங்கா இராணுவத்தில் அதற்கான தகைமையை அவர் ஏற்கனவே பெற்றுவிட்டதாகவே இராணுவ, அரசியல் வட்டாரங்களில் கருதப்படுகிறது. ஆனால், இலங்கையின் இராணுவ வரலாற்றில் இதுவரை என்றுமே இல்லாதவாறு பெரும் சமர் ஒன்றை நடத்தி சிங்கள மக்களால் ஏற்கனவே தனக்கு வழங்கப்பட்டிருந்த 2-வது துட்டகைமுனு என்னும் பாத்திரத்தை நிலையானதாகவும், வேறு எவராலும் தட்டிப்பறிக்க முடியாததாகவும் ஆக்கிக் கொள்ள டென்சில் கொப்பேகடுவ திட்டமிட்டிருந்தார். அல்லது அபிலாசை கொண்டிருந்தார் என்பதிலும் கேள்விக்கு இடமில்லை என்றே கூறலாம்.

1993 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் பதவி நிலை மாற்றத்துடன் இராணுவ தலைமையகத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்லவிருந்த டென்சில் கொப்பேகடுவ தனது "இறுதிச் சமர் வெற்றியாக" யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தார் இவ் வெற்றியின் மூலம், தனது இறுதிக் காலம்வரை 'புகழ்பூத்த' தளபதியாக இராணுவத்தின் உயர் பதவியை எவரும் எவ்வேளையிலும் தட்டிப்பறிக்க முடியாத ஒரு நிலையை உருவாக்குவதே டென்சில் கொப்பேகடுவவின் நோக்கமாக இருந்ததெனக்கூறலாம் இலங்கையில் எவ்வளவு பெரிய சமர்களை எங்கு நடத்தினாலும், யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் சமர்களே தளபதிகளுக்குப் புகழ்சேர்க்கும் சமர்களாக இருக்கும் கடந்த காலமும் இதையே உணர்த்தியது. எவ்வளவோ பெரிய சமர்களைக் கண்டபின்பும் ஒபரேசன் லிபரேசனின் முக்கியத்துவம் அவ்வாறானதேயாகும். இந் நிலையில் [illegible] குறித்து எந்த நிலையில் முடிவு மேற்கொள்ளப்பட்டது என்பதே போதுமானதாகும். ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆட்பற்றாக்குறை பற்றி நீண்டகாலமாகவே இராணுவத் தரப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டு வந்தது இதன் காரணமாக புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையில் இராணுவத் தளபதிகள் மட்டத்திலசிலகருத்து முரண்பாடுகளும் இருந்தன. ஒரு பகுதியினர், கிழக்கிலேயே புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை தீவிரமாக்க வேண்டும் எனக் கருதினர் வடக்கில் தாக்குதலுக்குப் போதியது நப்புக்கள் இல்லை எனவும். இழப்புக்களின் மத்தியில் சில



பகுதிகளைக் கைப்பற்றினாலும், கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது சிக்கலான காரியம் எனவும் வாதிட்டனர் அத்தோடு யாழ்ப்பாணச் சமரில் வெற்றிபெற முடியுமா என்ற கேள்வியையும் அவர்கள் கொண்டிருந்தனர்

ஆனால், ஒரு பகுதியினர் யாழ் குடாநாட்டை (யாழ்ப்பாண நகரம் பிரதான இலக்கு) பிடிப்பதன் மூலம் புலிகளை வடக்கிலும் கிழக்கிலும் பலமிழக்கச் செய்யலாம் எனவும்வாதிட்டனர். இதில் டென்சில் கொப்பேகடுவவின் பங்கு காத்திரமானதாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணச் [illegible]

டென்சில் கொப்பேகடுவவின் இராணுவ ரீதியான முன்னேற்றமும், பதவி உயர்வும் அபிலாசையும் பற்றி எவருக்கும் சந்தேகம் எதுவும் எழ வாய்ப்பில்லை- ஆனால், அரசியல் ரீதியில் அவரது இலக்கு என்ன என்பது திடமாகக் கூற முடியாவிட்டாலும் அரசியலில் அவருக்கிருந்த அபிலாசைகள் குறித்து சில சந்தேகங்கள் இருந்தன. ஆனால் எவ்வேளையிலும் டென்சில் கொப்பேகடுவ அரசியல் குறித்துப் பேசவில்லை இறுதியாக மரணத்தின் முன் அவர் லங்கா தீபவிற்கு வழங்கிய பேட்டியில் தான் அரசியலில் ஈடுபட விரும்பவில்லை எனத் தெரிவித்திருந்தார்

டென்சில் கொப்பேகடுவவிற்கு பலமான ஓர் அரசியல் பின்னணி இருந்தது இவர் ரத்வத்த குடும்பத்திற்கு (சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு) ஓர் பிரதிநிதியாக சிறிலங்கா அரசியலில் அறிமுகப்படுத்தப்பட்ட கொப்பேகடுவ குடும்பத்தின் பின்னணியில் வந்தவர் அத்தோடு, ரத்வத்த குடும்பத்துடன் நெருக்கமான குடும்ப உறவுகளையும் கொப்பேகடுவ குடும்பம்கொண்டிருந்தது இந்நிலையில் டென்சில் கொப்பேகடுவவிற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பலமான அரசியல் தளம் இருந்தது.

இதேவேளை டென்சில் கொப்பேகடுவவின் அரசியல் ரீதியான பங்கு நீண்டகாலமாகவே சர்ச்சைக்குரியதொன்றாக இருந்து வந்துள்ளது இதில் டென்சில்கொப்பேகடுவ எந்தளவிற்குப் பங்காற்றினார் எந்தளவிற்குப் பழிவாங்கப்பட்டார் என்பவை கேள்விக்குரியதாகினும் இவர் அரசியற் சர்ச்சையில் இருந்து தப்பவில்லை ஒதுங்கவில்லை என்பதே நிதர்சனமானதாக இருந்தது அதாவது இவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவரால் அரசியலிலிருந்து விலக முடியவில்லை

இதனால் சிறிலங்காவில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மாறிமாறி ஆட்சிக்கு வந்த போது அரசியல்வாதிகள் போன்று இவரும் ஏற்றமும், இறக்கமும் அடைய வேண்டிவந்தது 1965 ஆம்ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக நடைபெற்ற இராணுவச் சதியில் இவருக்கும் பங்கு [illegible] சிறந்த இராணுவ சாதனை நிகழ்த்தியதற்காக அவர்பெருமை படுத்தப்பட்ட சமயத்திலேயே ஆகும்" என சண்டே ரைம்ஸ் குறிப்பிடுகிறது

இந்நிலையிலும் டென்சில் கொப்பேகடுவ தனதுஅரசியல் அபிலாசைகள் பற்றிப்பேசவில்லை ஆனால், டென்சிலின் அரசியல் குறித்து பிரேமதாசா அரசாங்கம் சிறிது கவனம் கொண்டிருந்தது- அவ்வாறுகொள்வதற்கு நியாயமான சந்தேகங்கள் சிலவும் இருந்தன- ஆனால். இவை யாவும் ஆதாரமற்றவையாகவே இருந்தன

கடந்த வருடத்தில் ஜனாதிபதிக்கு எதிராகஇம்பீச்மண்ட் மனுதாக்கல் செய்யப்பட்ட வேளை, எழுந்த அரசியல் நெருக்கடியின் போது சில சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் அரசாங்கத்திற்கு எதிராக சில பௌத்த பிக்குகளுடன் சேர்ந்து செயற்பட முற்பட்டதாக அரசாங்கத்தரப்பு குற்றம் சாட்டியது- இக்குற்றச்சாட்டு டென்சில் கொப்பேகடுவவை பிரதானமாகக் கொண்டு எழுப்பப்பட்டதென்றே அரசியல் விமர்சகர்கள் குறிப்பிட்டார்கள்-

இதற்கு ஏற்றால் போல் டென்சில் கொப்பேக்கடுவவும் சில பிக்குகளுடன் நெருக்கமான உறவை வளர்த்துக் கொண்டிருந்தார் இதில் முக்கியமானவராக, தந்திரிமலையில் பிரதமபிக்குவாக இருந்து பின்னர், குண்டுவீச்சில் கொல்லப்பட்ட புடவொங்கஸ் விமலஞானதேரோ இருந்தார் இப்பிக்குவின்வாசஸ்தலத்திலேயே 'இம்பீச்மண்ட்' மனுவால் எழுந்த அரசியல் நெருக்கடியின் போது அரசவிரோத போக்குடையோர் சந்தித்துக் கொண்டதாக கருதப்படுகிறது-

இவற்றிற்கும் அப்பால் இராணுவத் தளபதியான டென்சில் தனக்கென மக்களிடம் ஒரு தளத்தை ஏற்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருந்தார் இராணுவ அதிகாரி என்பதற்கு அப்பால் சிங்கள மக்களிடம் சிங்கள இனத்தின் பாதுகாவலன் எனக் காட்ட முற்பட்ட வேளையில் தான் ஒரு இனவாதி அல்ல என தமிழர் மத்தியில் காட்ட முற்பட்டார் -திட்டமிட்ட தனது இந் நடவடிக்கையில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார்

இந்நிலையில் இவரின்இறுதி [illegible]


## இறுதிக் கணப்பொழுதில்

தேசம் விடிந்திட
நிலவொன்று
தன்னைத்
தேய்த்துக் கொண்டிருந்தது.
சுதந்திர வாழ்வைக்
காப்பதற்காக
வாலிபம் ஒன்று
சாவின் பிடியில்
தத்தளித்தது;
தவித்துத் துடித்தது.
நீதி கேட்டு
நீரை ஒறுத்தது.
பாதைத்
தடையகற்ற
பசியைத் துறந்தது.
மின்சாரம் பாய்ந்த
போலி வேலிகளின்
உண்மைச் சொரூபத்தை
உலகுக்கு உணர்த்த
தன்னையே
முதற் பலியாகக்
கருக்கிக் கொண்டது.
'அகிம்சைப்
பாடம் சொல்வது
வெளியுலகுக்கு
மட்டும்தான்.'
பாரதத்தின் கொள்கை
பகல் வெளிச்சமாய்
உலக அரங்குகளில்
பட்டுத் தெறித்தது.
அண்டம் அதிர்ந்தது.
'தாம் விழித்திருக்க
நிகழ்ந்த கொலை.'
உலகம்
வேதனையுடன்
வெட்கித் தலைகுனிந்தது.
இறுதிக் கணப்பொழுதிலும்
மங்கிய பார்வையுடன்
மாற்ற முடியாத
நம்பிக்கையுடன்
திலீப விழிமலர்
மெல்லத் திறந்தது.
'மக்கள் புரட்சி.
இது என் கனவல்ல,
என் உணர்வின் துடிப்பு.'
சொல்லாமல் சொல்லி
விழி மூடியது.
எம் தேசத்து
உயிர்கள் யாவும்
உயிர்ப்பூவின் உதிர்வால்
ஒரு கணம்
உறைந்தே போயின.
ஆயினும்
திலீபத் துடிப்பை
உள்வாங்கிக் கொண்டன.
உதிரம் சொட்டிய
உயிர் அணுக்களுக்குள்
செந்தீக் குழம்பைத்
தீர்க்கமுடன்
ஊற்றிக் கொண்டன.

பதவியை ... ஜெனரல் டென்சில் கொப்பேகடுவ யாழ் மாவட்டத் தளபதியாகப் புதிய நியமனம் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது- ஆனால் இறுதியில் அத்திட்டம் கைவிடப்பட்டது அதாவது இராணுவ அதிகார கட்டளையிடும் அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் கூட்டுப்படை நடவடிக்கைத் தலைமைத் தளகர்த்தா ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தியதே ஒழிய லெப். ஜெனரல் டென்சில் கொப்பேகடுவின் அதிகாரங்களைக் கட்டுப்படுத்தவில்லை.

இதேவேளை டென்சில் கொப்பேகடுவவைத் திருப்திப்படுத்தும் நோக்கிலும் சில அறிவிப்புக்களைக் காலம் முந்தியே சிறிலங்கா ஜனாதிபதி அறிவிக்க வேண்டியும் வந்தது. இவ் அறிவிப்புக்களின்படி 1993 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து இராணுவத் தலைமை அதிகாரியாக (சீப் ஒப் ஸ்ராவ்) பதவி உயர்வு பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டது- இவ்அறிவிப்பைச் சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் ''பிரேமதாசாவின் புத்திசாதுரியமான அறிவிப்பு'' என்றார்-

இவ்வாறாக இராணுவத்தில் பலம் பொருந்திய சக்தியாக உருவாகியிருந்த டென்சில் கொப்பேகடுவ இறக்கும் வரை தனது அரசியல் இலக்குக் குறித்தோ, இராணுவத்தில் தனது எதிர்கால இலக்குப் பற்றியோ வெளிப்படையாக சுத்திரகு இடமாற்றம் பெற்றுச் செல்லவிருந்த டென்சில் கொப்பேகடுவ தனது ''இறுதிசள வெற்றியாக'' யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றத் திட்டமிட்டிருந்தார் இவ் வெற்றியின் மூலம், தனது இறுதிக் காலம்வரை 'புகழ்பூத்த' தளபதியாக இராணுவத்தின் உயர் பதவியை எவரும் எவ்வேளையிலும் தட்டிப்பறிகக முடியாத ஒரு நிலையை உருவாக்குவதே டென்சில் கொபபேகடுவவின் நோக்கமாக இருந்ததெனக்கூறலாம் இலங்கையில் எவ்வளவு பெரிய சமர்களை எங்கு நடத்தினாலும், யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் சமர்களே தளபதிகளுக்கு புகழ்சேர்க்கும்சமர்களாக இருக்கும் கடந்த காலமும் இதையே உணர்த்தியது. எவ்வளவோ பெரிய சமர்களைக் கண்டபின்பும் ஒபரேசன் லிபரேசனின் முக்கியத்துவம் அவ்வாறானதேயாகும். இந் நிலையில் யாழ்ப்பாணம் மூலம் கிடைக்கப்பெறும் வெற்றி அண்மைக் காலத்தில் எத் தளபதிக்கும் எட்ட முடியாத புகழைத் தேடித்தரும் என்பதில் அவர் நம்பிக்கை கொண்டிருந்ததாகத் தெரிகின்றது இதன் காரணமாக, எவ்வாறேனும் தனது வடபகுதிச் சேவைக் காலத்திற்குள் சமர்களுக்கெல்லாம் தாயான சமரான யாழ்ப்பாணச் சமரை நடத்தி முடித்துவிட வேண்டும் என்பதில் அவர் திடமாக இருந்தார்.

இதனைப் புரிந்து கொள்வதற்கு யாழ்ப்பாணச் சமர்  பகுதிகளைக் கைப்பற்றினாலும், கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது சிக்கலான காரியம் எனவும் வாதிட்டனர் அதோடு யாழ்ப்பாணச் சமரில் வெற்றிபெற முடியுமா என்ற கேள்வியையும் அவர்கள் கொண்டிருந்தனர்

ஆனால், ஒரு பகுதியினர் யாழ் குடாநாட்டை (யாழ்ப்பாண நகரம் பிரதான இலக்கு) பிடிப்பதன் மூலம் புலிகளை வடக்கிலும் கிழக்கிலும் பலமிழக்கச் செய்யலாம் எனவும்வாதிட்டனர். இதில் டென்சில் கொப்பேகடுவவின் பங்கு காத்திரமானதாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணச் சமர் நடத்துவதென முடிவெடுக்கப்பட்டது ஓகஸ்ட் மாதத்தின் முதலாம். இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கும் யாழ்ப்பாணச்சமர் செப்டம்பர் மாத இறுதிக்குள் முடிவிற்குக் கொண்டு வருவதெனத் திட்டமிடப்பட்டது இவ்வாறு திட்டமிடப்பட்ட சமர் வெற்றி பெறும் பட்சத்தில் ஜனவரியில், வெற்றிப் பெரிமிதத்துடன் புதுப்பதவியைப்பொறுப்பேற்கலாம் எனவும், அடுத்த உயர்பதவிக்கு கேள்வி இன்றியே தான் முன்னேறிச்செல்ல முடியும் என்பதும் டென்சில் கொப்பேகடுவவின் இலக்காகும்-

கொப்பேகடுவவின் அரசியல் ரீதியான பங்கு நீண்டகாலமாகவே சர்சைக்குரியதொன்றாக இருந்து வந்துள்ளது இதில் டென்சில்கொப்பேகடுவ எந்தளவிற்குப் பங்காற்றினார் எந்தளவிற்குப் பழிவாங்கப்பட்டார் என்பவை கேள்விக்குரியதாகினும் இவர் அரசியற் சர்சையில்இருந்துதப்பவில்லை ஒதுங்கவில்லை என்பதே நிதர்சனமானதாக இருந்தது அதாவது இவர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் இவரால் அரசியலிருந்து விலக முடியவில்லை

இதனால் சிறிலங்காவில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் மாறிமாறி ஆட்சிக்கு வந்த போது அரசியல்வாதிகள் போன்று இவரும் ஏற்றமும், இறக்கமும் அடைய வேண்டிவந்தது 1965 ஆம்ஆண்டில் ஐக்கிய தேசியக்கட்சிக்கு எதிராக நடைபெற்ற இராணுவச் சதியில் இவருக்கும் பங்கு உண்டு என குற்றம்சாட்டப்பட்டு மூன்றாண்டுகால சம்பளமற்ற விடுமுறையில் செல்லப் பணிக்கப்பட்டார் பின்னர் 1970 சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்தபோதே மீண்டும் பதவியைப் பெறும் வாய்ப்பு கிட்டியது

இதன் பின்னரும் ஆதாவது தளபதி அந்தஸ்துப்பெறறபோதும் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக்காலத்தில், பல நெருக்கடிகளுக்கும் அவமரியாதைக்கும் டென்சில்கொப்பேகடுவ முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ''இரக்கமற்ற ரீதியில் இவர் நடத்தப்பட்டது கடந்தஆண்டில் ஒப்பரேசன் பலவேகய இராணுவ நடவடிக்கையில் பிரதமபிக்குவாக இருந்து பின்னர், குண்டுவீச்சில் கொல்லப்பட்ட புடவொங்கஸ் விமலஞானதேரோ இருந்தார் இப்பிக்குவின்வாசஸ்தலத்திலேயே 'இம்பீச்மண்ட்' மனுவால் எழுந்த அரசியல் நெருக்கடியின் போது அரச விரோத போக்குடையோர் சந்தித்துக் கொண்டதாக கருதப்படுகிறது-

இவற்றிற்கும் அப்பால் இராணுவத் தளபதியான டென்சில் தனக்கென மக்களிடம் ஒரு தளத்தை ஏற்படுத்துவதிலும் அக்கறை கொண்டிருந்தார் இராணுவ அதிகாரி என்பதற்கு அப்பால் சிங்கள மக்களிடம் சிங்கள இனத்தின் பாதுகாவலன் எனக் காட்டமுற்பட்ட வேளையில் தான் ஒரு இனவாதி அல்ல என தமிழர் மத்தியில் காட்ட முற்பட்டார் -திட்டமிட்ட தனது இந் நடவடிக்கையில் அவர் ஓரளவு வெற்றியும் பெற்றார்

இந்நிலையில் இவரின்இறுதி அபிலாசை இராணுவத்தலைமைத் தளபதி என்பது மட்டும் தானா? அல்லது அதற்கு அப்பால் ஜனாதிபதிப் பதவி வரை இருந்ததா? ஆனால் சமர்களுக்கெல்லாம் தாயான யாழ்ப்பாணச்சமரை ஆரம்பிக்கும் முன்னரே விடுதலைப்புலிகளின் கண்ணிவெடித் தாக்குதலால்இவர்கொல்லப்பட்டமை இக்கேள்விகள் யாவற்றையும் அர்த்தமற்றதாக்கிவிட்டதோடு சிறிலங்காஇராணுவத்தின்ஒழுங்கு வரிசையில் உடன் நிரப்ப முடியாத பல இடைவெளிகளையும் ஏற்படுத்தி உள்ளது.

-ஜெயராஜ்

மங்கிய பார்வையுடன்
மாற்ற முடியாத
நம்பிக்கையுடன்
திலீப விழிமலர்
மெல்லத் திறந்தது.
'மக்கள் புரட்சி.
இது என் கனவல்ல,
என் உணர்வின் துடிப்பு.'
சொல்லாமல் சொல்லி
விழி மூடியது.
எம் தேசத்து
உயிர்கள் யாவும்
உயிர்ப்பூவின் உதிர்வால்
ஒரு கணம்
உறைந்தே போயின.
ஆயினும்
திலீபத் துடிப்பை
உள்வாங்கிக் கொண்டன.
உதிரம் சொட்டிய
உயிர் அணுக்களுக்குள்
செந்தீக் குழம்பைத்
தீர்க்கமுடன்
ஊற்றிக் கொண்டன.
'வீரசுதந்திரம்
எங்கள்
இதய மந்திரம்.
கோரப் பகையைக்
கொன்றொழித்துப்
புலிக்கொடியை
நாட்டுவோம்
எம் தமிழீழத்தில்.'
எடுத்தன சபதம்.
வீரமுடன் எழுந்தன.
வேங்கைகள் சிலிர்த்தன.

– வருணி

## இனியும் ஏன்

உயிரிகளும் இருக்கலாமெனவும் ஒரு ஊகத்தை முன்வைக்கிறார்-

முன்னொரு காலத்தில் கலீலியோ என்ற விஞ்ஞானி தான் கண்டுபிடித்த தொலைகாட்டி மூலம், சந்திரனை பூமியில் இருந்தே அவதானித்து, சந்திரனில் தோன்றும் களங்கங்கள் வளைந்த மலைத்தொடர்களினால் சூழப்பட்ட பெரும் பள்ளத்தாக்குகளே எனக் கூறினார்- அம்மலைத் தொடர்களையும் பள்ளத் தாக்குகளையும் அவர் அளந்ததோடு ஒவ்வொன்றுக்கும் பெயரும் வைத்தார்- அவருடைய இத்துணிச்சலான செய்கைக்காக அக்காலத்து சமய பீடாதிபதிகள் அவரைத் துன்புறுத்தினார்கள்- அவருடைய தொலைக் காட்டியினூடாகப் பார்க்கவும் மறுத்தார்கள்- அவரை உயிருடன் எரிக்கவோ கழுவல் ஏற்றவோ எத்தனித்தார்கள்- ஆனால், மக்களுக்கு கலீலியோவிடமிருந்த அபிமானம் அவரைக் காப்பாற்றியது-இனி, அடுத்த நூற்றாண்டுக் காலத்துக்குள் கலீலியோவினால் பெயர் சூட்டப்பட்ட மலைகளிலும் பள்ளத்தாக்குகளிலும் மக்கள் போய் உலாவி வரப் போகிறார்கள்-

புவியிலிருந்து நுணுக்கமான தொலை காட்டியினூடாக நோக்குகையில் சந்திரனின் பள்ளத்தாக்குகளிலிருந்து விசித்திரமான ஒரு வகை ஒளிக்கதிர்கள் வீசுவதை வானியல் விஞ்ஞானிகள் அவதானித்திருக்கிறார்கள்- இக் கதிர்கள் சந்திரனால் தெறிக்கப்படும் சூரிய ஒளி அல்ல- இவ்வொளி எப்படி உண்டாகிறது எனும்மர்மத்தைசந்திரனுக்குச் சென்று சந்திரவியல் ஆய்வில் ஈடுபடுபவர்கள் தீர்த்து வைப்பார்கள்-

ஆகவே, சந்திரப் பயணங்களுக்கும் சந்திர குடியேற்றத்திற்கும் விஞ்ஞா ரீதியான குறிக்கோளகளாக:-

i) பிரபஞ்சத்தைப் பற்றிய வானவியல் ஆய்வு-

(ii) தூரக் கிரகங்களுக்குப் போய் அவற்றில் குடியேறல்: அக்கிரகங்களைப் பற்றிய ஆய்வு-

(iii) சந்திர உள்ளமைப்பு பற்றிய ஆய்வு: சந்திரனில் கனிப்பொருடகளை அகழ்ந்தெடுத்தல் (Lunar Mining) என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன-

## இரு நாடகங்கள்

புடன் அது தொடர்பான வார்த்தைகளை மேடையில பலமுறை ஒப்புவிப்பதன்மூலம் நடிப்பைவிட வசனத்தின் ஆதிக்கம் உணர்த்தப்படுகிறது. நாடகத்தில் நடிகர்கள்வெற்றி பெறுவது எனபது நடிகர்களைப் பொறுத்த விஷயம் மட்டுமல்ல. இந்த நாடகத்தைப் பின்னணியில் நின்று இயக்கியவர்களும இதற்கான 'பாரச் சிலுவை'யைச் சுமந்தாக வேணடும.

நாடகத்தில் பங்குபற்றும் மூன்று குடும்பங்களும் சமகாலததில மேடையில தோன்றிக் கதையை நகர்த்துகிறார்கள். மேடையில் பூச்சாடிகள், கதிரை. மேசை,கட்டில், அலுமாரி, திரைச்சீலைகள் எனப் பலவேறு விவரணங்கள், மிகக் கச்சிதமாக இலேசான சில பொருள்களை அடையாளமாக மேடையில் எடுத்துக் கொண்டு நுணுக்கமாகக் காட்சியைச் சித்தரித்திருக்கலாம். அடபடிச் செய்யாதது மனதில் அழுத்தமற்ற ஒரு நிறைவை ஏறபடுததுகிறது-

நாடகத்தின் ஒலிச்(வாத்தியம) சூழல் பற்றியும இங்கு குறிப்பிட வேண்டும் நாடகம் முழுவதும் இடையிடையே மேடையில் கீழ் அமர்ந்திருந்தவர்கள் பின்னணி இசையை ஒலித்துக் கொண்டிருந்தார்கள் நாடகத்தில் முக்கியமான அம்சங்களில் ஒலியும் ஒன்று (இசையில்லாத நாடகங்களும் உண்டு) காட்சிகளுக்குத் துணைபோவது பின்னணி இசை. பேசும் வார்த்தைகள், இயல்பான சப்தங்கள் என்று ஒலி பல வகைப்படும் நாடகத்தின் கடைசிக் கட்டத்தில் 'சா' சம்பவிக்கும் போதும், அதனோடு இணைந்த நிலைகளிலும் இசைக்குழு, காட்சிப் படிமங்களுக்குத் துணைபோகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது பல நாடகங்களில் இசை முக்கியத்துவம் பெற்று நடிப்பு இரண்டாவது கட்டத்துக்குத் தள்ளப்படுகிறது. ஆனால் இங்கு இசை ஓர் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. காட்சி, வார்த்தைகள் மூலம் சொல்ல முடியாதவைகளையும், மனத்தின் வெவ்வேறு நிலைகளையும் ஒலி மூலம் விளக்கி வெற்றியூ டியுள்ளார் அல்பிறட் வாறிடச்காக். நாடகத் தொழில்நுப வளர்ச்சியின் ஓர் அமசமான ஒலி இந்த நாடகத்தை வளப்படுததத் தவறியது விசனத்துக் குரியது.

ஆரம்பித்த இடத்திலேயே திரும்பவும் கதையை முடிப்பது போன்று பாரதியாரின் எந்தையும் தாயும் என்றபாடலுடன் நாடகம் முடிவு பெறுகிறது. அக்கட்டத்தில் ''வந்தே மாதரம'' என்ற சொற்றொடரை நிக்கி இருந்தால் பாட்டின் தாககததுக்கு எந்தவித ஊறையும் ஏற்படுத்தியிராது என நான் நினைக்கிறேன்.

எந்த விதமான நாடகப் பிரதிகளையும் எவர் எழுதி நெறிப்படுத்தினாலும். அவருக்குரிய சுயமான முத்திரை எல்லா நாடகங்களிலும் பிரதிபலிக்கும் என்பது உண்மை என்றாலும், நாடகம் வெறுமனே பார்த்துச் சிரித்து விட்டுப் போக மட்டும் அல்ல என்பது மரபு.

★ ★ ★

## இலட்சியப் பணி தொடர ஓயாது உழைக்கவேண்டும்

வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கைகளின் நினைவாக வீதிஓட்டங்களும்' உதைபந்தாட்டங்களும் நடத்தப்படுவதுடன் நின்றுவிடாது இலட்சியப் பணியும் தொடரப்பட வேண்டும்.

இவ்வாறு மன்னார் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் நந்தகுமார் கூறினார். மன்னார்மண்ணில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட வீரவேங்கை சண் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவாக நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பும், அஞ்சலிக் கூட்டமும் இடம்பெறற போது அதில கலநதுகொண்டு அவா சிறப்புரை ஆற்றினார்.

அடம்பன் இத்திக்கண்டல் டிலாசா விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் பத்துமைல் தூர ஓட்டப்போட்டியும், மன்னார் பெருநிலப்பரப்பு உதைபந்தாட்ட கழகங்கள் பங்குபற்றிய உதைபந்தாட்டப் போட்டியும் கடந்த 07ஆம்09 ஆம் திகதிகளில் நடத்தப்பட்டன இந்த உதைபந்தாட்ட போட்டியில் அடம்பன் பழைய மாணவர் அணி விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆடி இரண்டுக்கு ஒன்று என்ற கோல் கணக்கில வெறறி பெற்றது.

## ஒரு முன்னாள்

தயான் சாடுகிறார். இறந்த தளபதிகளிற்த அஞ்சலி செலுத்தும் முறை இதுதானா என்று வினவுகிறார் போரில் வெற்றியீட்டி வரும் ராணுவத்திற்த எதிராக நிலக்கண்ணிகளைப் புதைபபதற்தச் சமமானது இது என்று அவர் விமர்சிக்கிறார்.

தயான் தேசத்துரோகத்தைப் பற்றிக் கதைக்கிறார். யுத்தத்தில்வெற்றிகளைப்பெறுவதின் மூலம் இலங்கைத் தீவின் ஐக்கியத்தைப் பேண முடியும் என்று கற்பனை செய்கிறார் சந்தேகமேயில்லாமல் அது கற்பனைதான். மறுபடியும்மறுபடியும் தயான் களயதார்த்ததைப் புரிந்து கொள்வதாயில்லை கனத்தையில் ஒரு சுடுகாட்டில் உதிக்காத ஞானம், வேறு எங்கேதான் உதிக்கப்போகிறதோ?

ஈழநாதம்

# அரசியல் தீர்வை முன்வைக்க எவருக்கும் துணிச்சலில்லை

## செல்லச்சாமி தெரிவிப்பு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்குச் சரியான பரிகாரம் அரசியல் தீர்வு என்று எல்லோரும் ஒப்புக் கொள்கின்றார்கள் ஆனால் எந்த அரசியல் தீர்வு சரியானதென்பதைத் தைரியமாக இதய சுத்தியோடு அரசியல் லாபமற்ற முறையிலே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக இருக்குமென்று சொல்லக் கூடிய துணிவு எவருக்கும் இல்லாத நிலை இருந்து வருகின்றது இது கட்சிகளுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல ஒரு பெரும் தேசியப் பிரச்சினை இந்த நாட்டிலே பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு மேலாக அழிவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற பிரச்சினை என்று கைத்தொழில் இராஜங்க அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி பாராளுமன்றத்தில் உரை நிகழ்த்தும் போது கூறினார்.

அவர் தனது உரையில், அரசியல் தீர்வொன்று ஏற்படாத வரை மாதாந்தம் நாம் விவாதங்களில் கலந்து கொள்ளும் போது புதிய சம்பவங்கள் நடந்து கொண்டேயிருக்கும் ஒவ்வொரு மாதமும் கடந்த மாதத்தை மறந்து புதிய புதிய பிரச்சினைகளை பற்றியே பேசுகிறோம் இது தான் எமது சுதந்திரமாக இருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் இறந்தவர்களுக்கெல்லாம் அனுதாபம் தெரிவிப்பதாக இருந்தால் இந்த நாடு அழுது கொண்டேயிருக்க வேண்டும் இறந்தவர்களுக்கெல்லாம் இந்த நாடு துக்கம் அனுஷ்டித்துக் கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தால் அபிவிருத்தி வேலைகளை நாம் செய்ய முடியாது.

ஆகையினால் மாதாந்தம் இப்படியான பிரச்சினைகளைப் பேசிக்கொண்டிராமல் ஆளும் கட்சியும் சிங்கள மக்களின் நம்பிக்கையை பெற்றிருக்கிற சிறிலங்காசுதந்திரக் கட்சியும் ஒரு அரசியல் தீர்வைச் சமர்ப்பித்து இனப் பிரச்சினைக்கு ஓரிரு மாதத்துக்குள் தீர்வைக் கண்டு யுத்தத்தை நிறுத்தி இந்த யுத்தத்திற்காக செலவிடப்படுகின்ற கோடிக்கணக்கான ரூபா பணத்தை அபிவிருத்திக்குச் செலவிடுதல் வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# சாதுரியமான தலைவர் பிரேமாவிற்கு 'இந்து' புகழாரம்

(சென்னை)

ஒவ்வொரு தடவையும் நெருக்கடிகளை வெகு சாதுரியமாக வெற்றி கொண்டு வருபவர் என்று சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகை பிரேமதாசாவிற்கு புகழாரம் சூட்டியுள்ளது.

அவரின், திட உறுதியைப் பாராட்டியிருப்பதோடு, அவரது அசாதாரணதிறமைகளை இந்துப் பத்திரிகை மெச்சியுள்ளது. அத்துடன் இலங்கையின் எதிர்க்கட்சிகள் பிளவுபட்டிருப்பதோடு, கட்சிகள் தமக்கிடையே கூட ஒற்றுமையைக் கொண்டிருப்பதாக தெரியவில்லை என்றும், ஐ தே. கவை எதிர்ப்பதற்குத் தானும் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுவதாக இல்லை என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது

## அறிவித்தல்

### நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

தியாகச்சுடர் திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவாக 19 - 09 - 92 சனிக்கிழமை நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் காலை 7-00 மணியிலிருந்து மாலை 5 00 மணி வரை நல்லூர் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளது.

நல்லூர் பிரதேச வர்த்தகர்கள் அனைவரும் அன்றைய தினம் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அ. தனபாலசிங்கம்
செயலாளர்

என். கே. குலசிங்கம்
தலைவர்

பாடசாலைகளுக்கு இடையேயான

# உதைபந்தாட்ட போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன

யாழ்- மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான 19 வயது பிரிவு 17 வயது பிரிவு உதைபந்தாட்டசுற்றுப்போட்டிகளின் முதற்கட்டமாகக் கோட்டமட்டப் போட்டிகள் இன்று ஆரம்பமாகின்றன. இப்போட்டிகள் லீக் முறையில் நடைபெறும்.

கோட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டிகளில் தெரிவு செய்யப்படும் அணிகள் மாவட்டமட்டத்திலான போட்டிகளில் பங்குபெற இருக்கின்றன.

ஆறு கல்விக் கோட்டங்களிலிருந்தும் நூற்றுக்குமதிகமான பாடசாலைகள் களத்தில் மோதக் குதித்துள்ளன- நீண்ட காலத்திற்குப் பின்பு லீக் முறையில் நடைபெறும் இப்போட்டிகளில் வெற்றி பெறும் அணிகளுக்கு தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையினால் வெற்றிக்கிண்ணங்கள் வழங்கப்படும் இக்கிண்ணங்கள் சுற்றுக் கிண்ணங்களாக ஆண்டுதோறும்வெற்றிபெறும் அணிகளுக்கு வழங்கப்படும்- பார்வையாளர்களாக வரும் மாணவர்களுக்கு ரூபா இரண்டும் வளர்ந்தோருக்கு ரூபா மூன்றுமாக நுழைவுக் கட்டணம் பெறப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுப் போட்டிகளில் இன்று உரும்பராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம் பெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு.

17 வயது ஏ பிரிவில் யா/ தமிழ் கந்தையா வித்தியாலயம் எதிர் அத்தியார் இந்துக் கல்லூரி அதே பிரிவில் யா/ஸ்கந்தவரோதயா கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

யா/ஸ் கந்தரோதயா கல்லூரி மைதானத்தில் இன்று இடம்பெறவுள்ள போட்டிகளின் விபரம் வருமாறு,

17 வயது ஏ பிரிவில் யா/ உடுவில் மான்ஸ் எதிர்அச்சுவேலி மத்தியமகா வித்தியாலயம். 19 வயது பிரிவு யா/ உரும்பராய் இந்துக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

# உறங்கிக்கொண்டிருந்த ஆசிரியர் குத்திக் கொலை

வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த ஆசிரியர் ஒருவர் இனந் தெரியாத நபர்களால் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டுள்ளார் என தெரியவருகிறது

மேற்படி சம்பவம் ராகலை பொலிஸ் பிரிவைச் சேர்ந்த கொலனிப் பகுதியில் நடைபெற்றுள்ளது.

ரிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் சுப்பையா சுந்தரம் (வயது 26) என்ற ஆசிரியரே இவ்வாறு கொல்லப்பட்டவராவார்.

மேற்படி சம்பவம்பற்றி மேலும் தெரியவருவதாவது. சம்பவதினம் இறந்தவரும் சகோதரனும் சகோதரி வீட்டில் இருந்தனர் என்றும், அதிகாலை 4 30 மணியளவில் இறந்தவரின் சகோதரன் கதவைத் திறந்தபோது அவ்விடத்திற்கு ஐவர் வந்தனர் என்றும், மூவர் வீட்டிற்குள் நுழைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இருவர் கதவினைத் திறந்தவரை வெளியே இழுத்துச்செல்ல ஏனைய மூவரும் உறக்கத்தில் இருந்தவரை வெட்டியும் குத்தியும் கொலை செய்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

### வீரச்சாவு

இம்மோதலில் வீரச் சாவு அடைந்த 2-ம் லெப்டினன்ட் தங்கன் (சிவபாதம் பரமேஸ்வரன் 8-ம் வட்டாரம் வேலணை மேற்கு), வீர வேங்கை கரிகாலன் (பதுமன்- வீரையா வீரபூரணகுமார் வேலணை கிழக்கு வேலணை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கேள்வி அறிவித்தல்

பிரதேச கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்

பாடசாலைகளில் திருத்த வேலைகள்

## கருத்தரங்கு

தமிழீழ மாணவர்களுக்கான அறிவியல் கருத்தரங்குத் தொடரில் இன்று மாலை 3-30 மணிக்கு கொக்குவில் குளப்பிட்டி சந்தியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியகத்தில் ''உயிரினத்தின் தோற்றம்'' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெறும். கருத்தரங்கு தொடர்பான ஒளிப்பதிவு நாடாவும் காண்பிக்கப்படும் மாணவர்கள் பங்கு கொண்டு பயன் அடையுமாறு வேண்டிக்கொள்ளப் படுகிறார்கள்

### தியாகி திலீபனின்

ணம் உருவப்படம் அமைக்கப் பட்டுள்ளது-

வீதிகள் தோறும் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டு திலீபன்ன் உரைகள், கவிதைகள் ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிபரப்பப்பட்டது-

### தியாகி


படவுள்ளது.

கரவெட்டி வட்டப் பிரிவில் துன்னாலை மக்களால் மாவீரர் பீடமும் சிறு வீதியும் திருத்தி அமைக்கப்படும்.

பளை வட்டப்பிரிவில் பொது மக்களால் அரசன் நகர் வீதி திருத்தி அமைக்கப் படவுள்ளது.

கொடிகாமம் வட்டப்பிரிவில் பொது மக்களால் வரணி அரசினர் வைத்தியசாலை துப்புரவு செய்யப்படும்.

தீவக மாணவர் அமைப்பு



# தியாகி திலீபன் நினைவாக மாணவர்கள் சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

தியாகி லெப் கேணல் திலீபனின் 5ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வாக விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கோட்டரீதியாக இன்றுமுதல் சிரமதான பணிகளை மேற்கொள்ளவிருப்பதுடன் நினைவுகூட்டங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தவுள்ளது.

சிரமதானப்பணிகள் இன்று காலை 9மணிக்கு சங்கானை முருகமூர்த்தி கோவில், மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ் புகையிரத நிலைய இடம் பெயர்ந்தோர் முகாமிலும் நடைபெறவுள்ளன

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ் போதனா வைத்திய சாலையிலும் 21ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் மந்திகை வைத்திய சாலையிலும் 25ஆம் திகதி பண்டிதர் குடியிருப்பிலும் நடைபெறுகின்றன நினைவுக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் 21ஆம் திகதி காலை 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் 22ஆம் திகதி மாலை 2.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் 24 ஆம்திகதி மாலை 3மணிக்கு இராமநாதன் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் ஆகியவற்றிலும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 25ஆம் திகதியும் நிகழவுள்ளன.

கோட்டரீதியாக நடைபெறவுள்ள மேற்படி சிரமதானப் பணிகளில் மாணவர் அமைப்பு உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது

### பெல்ஜியத்தின்

ரவைகளையும் சிறிலங்கா அரசு வடக்கு, கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்தியதாக இப்

### இன்று 'குமண' திருமலை செல்கிறது

கொழும்பில்சிகிச்சைபெற்று யாழ்ப்பாணம் திரும்பி வரும் நோயாளர்களை ஏற்றிவர ''குமண'' கப்பல் இன்று திருக்

யமாக வெற்றி கொண்டு வருபவர் என்று சென்னையிலிருந்து வெளியாகும் இந்து பத்திரிகை பிரேமதாசாவிற்கு புகழாரம் சூட்டியுள்ளது.

அவரின், திட உறுதியைப் பாராட்டியிருப்பதோடு, அவரது அசாதாரணதிறமைகளை வுபட்டிருப்பதோடு, கட்சிகள் தமக்கிடையே கூட ஒற்றுமையைக் கொண்டிருப்பதாக தெரியவில்லை என்றும், ஐ. தே. கவை எதிர்ப்பதற்குத் தானும் எதிர்க்கட்சிகள் ஒன்றுபடுவதாக இல்லை என்றும் அப்பத்திரிகை கூறியுள்ளது

# அறிவித்தல்

## நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம்

தியாகச்சுடர் திலீபனின் 5 ஆம் ஆண்டு நினைவாக 19 - 09 - 92 சனிக்கிழமை நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் காலை 7-00 மணியிலிருந்து மாலை 5 00 மணி வரை நல்லூர் ஆலய முன்றலில் உண்ணாவிரதம் மேற்கொள்ளவுள்ளது.

நல்லூர் பிரதேச வர்த்தகர்கள் அனைவரும் அன்றைய தினம் தமது வர்த்தக நிலையங்களைப் பூட்டி இந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளுமாறு நல்லூர் பிரதேச வர்த்தகர் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

அ. தனபாலசிங்கம்
செயலாளர்

என். கே. குலசிங்கம்
தலைவர்

(3195)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 02 - 02 - 1971

விண்ணில் 19 - 09 - 1991

## வீரவேங்கை காமராஜி

(இ. ஆத்மஜோதி)

ஆத்மசாந்தி வேண்டி

''கொலைமேற் கொண்டாரின் கொடிதே அலைமேற்
கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து''

- குறள் -

பாரொடு விண்ணாய்ப் பரந்தவெம் பரனே
பற்றுயான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஆரொடு நோகேன் ஆர்க்கெடுத்துரைப்பேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகினில் வாழ்ந்திலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே.

- திருவாசகம் -

முரசுமோட்டை - 2 ஆம் கட்டை ஊற்றுவிநாயகர் ஆலயத்தில் 19. 09. 92 அன்று நடைபெற இருக்கும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், களைக் கேட்டுக் கொள்கிறோம்.

(3204)

- நண்பர்கள்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

றிலாமுல்ல தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக கடமையாற்றும் சுப்பையா

## வீரச்சாவு

இம்மோதலில் வீரச் சாவு அடைந்த 2-ம் லெப்டினன்ட் தங்கன் (சிவபாதம் பரமேஸ்வரன் 8-ம் வட்டாரம் வேலணை மேற்கு), வீரவேங்கை கரிகாலன் (பதுமன்-வீரையா வீரபூரணகுமார் வேலணை கிழக்கு வேலணை) ஆகிய இரு போராளிகளுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

டில் இருந்தனர் என்றும், அதிகாலை 4 30 மணியளவில் இறந்தவரின் சகோதரன் கதவைத் திறந்தபோது அவ்விடத்திற்கு ஐவர் வந்தனர் என்றும், மூவர் வீட்டிற்குள் நுழைந்தனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இருவர் கதவினைத் திறந்தவரை வெளியே இழுத்துச்செல்ல ஏனைய மூவரும் உறக்கத்தில் இருந்தவரை வெட்டியும் குத்தியும் கொலை செய்துள்ளனர் என பொலிஸ் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

# கேள்வி அறிவித்தல்

## பிரதேச கல்வித் திணைக்களம் யாழ்ப்பாணம்
## பாடசாலைகளில் திருத்த வேலைகள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் யாழ்- பிரதேச கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி (02 - 10 - 1992) முற்பகல் 10.00 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். ஒவ்வொரு வேலைக்கும் அதன் எதிரே காட்டப்பட்டுள்ள தொகைக்கு அல்லது அதனிலும் கூடிய தொகைக்கு ஒப்பந்த வேலை செய்வதற்கு என நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பதிவு செய்துள்ள ஒப்பந்த காரர்களுக்கு 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 25 ஆம் திகதி (25-09-92) பிற்பகல் 2.00 மணிவரை மீளளிக்கப்படாத கேள்விப்பணமாக ரூபா 50/- (ஐம்பது)ம் மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணமாக ரூபா 250/- (இருநூற்றைம்பது)ம் செலுத்தியதன் பேரில் கேள்விப் பத்திரங்கள் யாழ்- கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப்பணம், கேள்வி வைப்புப் பணம் ஆகியன வங்கிக் கட்டளையாகச் செலுத்தப்படல் வேண்டும். கேள்விகள் 1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2 ஆம் திகதி (02 - 10 - 1992) முற்பகல் 10 00 மணிக்கு யாழ்- கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். அச்சமயம் கேள்விக்காரர் சமுகம் அளிக்கலாம்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் ஒவ்வொரு வேலைக்குமான கால அட்டவணைப் படியும், ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக் கூடியவர்கள் மட்டும் இவ்வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

மேலதிக விபரங்களை யாழ்- பிரதேச கல்வித் திணைக்கள கட்டிட வேலைப் பொறியியலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

| பாடசாலையின் பெயர் | வேலை விவரணம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை ரூ ச |
|---|---|---|
| 01. யா/ஹாட்லிக் கல்லூரி | பாடசாலை கட்டிடத் திருத்த வேலைகள் | 150,000.00 |
| 02. யா/அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் | பாடசாலைக் கட்டிடத் திருத்த வேலைகள் | 75,000.00 |
| 03. யா/ஆனைக் கோட்டை அ.மி.த.க.பா. | பாடசாலைக் கட்டிடத் திருத்த வேலைகள் | 50,000.00 |

இ. சுந்தரலிங்கம்
பிரதேசக் கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்.

பிரதேச கல்வித் திணைக்களம்
யாழ்ப்பாணம்.
1992 - 09 - 18

[சி-5067]

## தியாகி திலீபனின்

ணம் உருவப்படம் அமைக்கப்பட்டுள்ளது-

வீதிகள் தோறும் ஒலிபெருக்கி பொருத்தப்பட்டு திலீபனின் உரைகள், கவிதைகள் ஒலிப்பதிவு நாடா மூலம் ஒலிபரப்பப்பட்டது-

## தியாகி

படவுள்ளது.

கரவெட்டி வட்டப் பிரிவில் துன்னாலை மக்களால் மாவீரர் பீடமும் சிறு வீதியும் திருத்தி அமைக்கப்படும்.

பளை வட்டப்பிரிவில் பொது மக்களால் அரசன் நகர் வீதி திருத்தி அமைக்கப் படவுள்ளது.

கொடிகாமம் வட்டப்பிரிவில் பொது மக்களால் வரணி அரசினர் வைத்தியசாலை துப்புரவு செய்யப்படும்.

தீவக மாணவர் அமைப்பு புகையிரத நிலைய இடம் பெயர்ந்தோர் முகாமில் மாலை 3 00 மணியளவில் சிரமதானப் பணிகளில் ஈடுபட உள்ளது.

## ஜே. வி. பி.

இவையே மிக அதிகமானவை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜே வி. பி. சந்தேக நபர் ஒருவர் கொடுத்த தகவலின் படியே இவை மீட்கப்பட்டன எனவும் ஆயுதங்களும் வெடிப்பொருள்களும் பீப்பாய்களினுள்ளும் பி. வி சி. குளாய்களினுள்ளும் போட்டு புதைத்து வைக்கப்பட்டிருந்தன எனவும் தங்காலைப் பொலிசார் தெரிவித்தனர்.

இந்த ஆயுதங்களுள் எவ். என். சி தன்னியக்க ரைபிள்கள், 25 கைத் துப்பாக்கிகள், 10 உள்ளூரில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள், சுழல்துப்பாக்கி ஒன்று என்பனவும் கைக்குண்டுகள், ஆயிரத்திற்கும் மேற்பட்ட தோட்டாக்கள் ஆகியனவும் இருந்தன என தெரிவிக்கப்படுகின்றது.

தல்கல்வல இராணுவ முகாமை தாக்குவதற்கு இந்த எவ் என். சி. துப்பாக்கிகளையே ஜே. வி பியினர் பயன்படுத்தினர் என பொலிசார் தெரிவித்தனர்.

மீண்டும் செயற்படலாமென்ற நம்பிக்கையுடனேயே இந்த ஆயுதங்கள் புதைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனவும் பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## எதிர்க்

கூறுகின்றன.

வடகிழக்கின் முக்கிய தொழில்களான மீன்பிடி விவசாயம் ஆகியன இன்று முடங்கிக் கிடக்கின்றன. அகதிகளில் 80 சதவீதத்திற்கு அதிகமானோர் தொழில் வாய்ப்பற்ற நிலையில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிரமதான பணிகளை மேற்கொள்ளவிருப்பதுடன் நினைவுகூட்டங்களையும் கலை நிகழ்ச்சிகளையும் நடாத்தவுள்ளது.

சிரமதானப்பணிகள் இன்று காலை 9மணிக்கு சங்கானை முருகமூர்த்தி கோவில், மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ் புகையிரத நிலைய இடம் பெயர்ந்தோர் முகாமிலும் நடைபெறவுள்ளன

எதிர்வரும் 20ஆம் திகதி யாழ் போதனா வைத்திய சாலையிலும் 21ஆம் திகதி மானிப்பாய் மகளிர் கல்லூரியிலும் மந்திகை வைத்திய சாலையிலும் 25ஆம் திகதி பண்டிதர் குடியிருப்பிலும் காணை சிவப்பிரகாச வித்தியாலயத்திலும் 24 ஆம்திகதி மாலை 3மணிக்கு இராமநாதன் கல்லூரி, வைத்தீஸ்வரா வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம் ஆகியவற்றிலும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் 25 ஆம் திகதியும் நிகழவுள்ளன.

கோட்டரீதியாக நடைபெறவுள்ள மேற்படி சிரமதானப்பணிகளில் மாணவர் அமைப்பு உறுப்பினர்கள், மாணவர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட விடுதலைப்புலிகள் மாணவர் அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது

## பெல்ஜியத்தின்

ரவைகளையும் சிறிலங்கா அரசு வடக்கு, கிழக்கு யுத்தத்தில் பயன்படுத்தியதாக இப்பொழுது தெரிய வந்துள்ளது

இச் செய்தியை மறுத்த சிறிலங்கா அரசு இவ் ஆயுதங்கள் தமக்கு அறிவிக்காமல் சிங்கப்பூர் கம்பனியொன்றிற்கு பெல்ஜியத்தால் விற்பனை செய்யப்பட்டதாக தெரிவித்துள்ளது.

## இன்று 'குமண' திருமலை செல்கிறது

கொழும்பில்சிகிச்சைபெற்று யாழ்ப்பாணம் திரும்பி வரும் நோயாளர்களை ஏற்றிவர ''குமண''கப்பல் இன்று திருக்கோணமலை செல்கின்றது.

இவர்களை ஏற்றிவரும் மேற்படி கப்பல் மீண்டும் யாழ். போதனா வைத்திய சாலையில் இருந்து 42 நோயாளர்களை நாளை மறுதினம் ஏற்றிச் செல்லும் என தெரியவருகின்றது. (பா)

# மரண அறிவித்தல்

## டொமினிக் மரியம்மா

பருத்தித்துறை 4-ம் குறுக்குத்தெருவை வசிப்பிடமாகக் கொண்ட, காலம் சென்ற சவிரி டொமினிக் அவர்களின் அன்பு மனைவி

### டொமினிக் மரியம்மா

அவர்கள் 17-09-92-ல் காலமானார். இவர் வைத்திய கலாநிதி D சந்தியாப்பிள்ளை (லண்டன்), திருமதி செபமாலையம்மா யேசுதாசன், திரு D. அருளானந்தம் (ஜெர்மனி), திருமதி பற்றிமாஇரவீந்திரதாஸ், திரு D.ஜோட்ஜ் (கடற்றொழில் பரிசோதகர் மட்டக்களப்பு) திரு. D அன்ரன் மரியதாஸ் (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலம் சென்ற அக்கினேசகன்னி சந்தியாப்பிள்ளை, திரு அருளப்பு யேசுதாசன் (சுவிற்சலாந்து), காலம் சென்ற திரு பாலசுப்பிரமணியம் இரவீந்திரதாஸ். திருமதி இராசாத்தி அருளானந்தம் (ஜெர்மனி), திருமதி கமலா லூட்ஸ்ஜோர்ஜ், திருமதி பமீலா அன்ரனி மரியதாஸ் (டென்மார்க்), திரு. மரியாம்பிள்ளை அருளப்பு ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்,

அ கீதா, ரஞ்சினி, யே. லூட்ஸ் சுகந்தினி, யே. ஜெயரஜனி, யே. யூலியற் தயாளினி, யே. சுதாநந்தினி, இ அன்ரோனிற்றா சுலக்சினி, ஜோ. வேர்ஜினியா டிலக்சினி, ஜோ. ரஜீவ் டயோனியஸ், ஜோ றெனோல் சுசிதரன், அ. மர்லின்றம்யா, ஆகியோரின் அன்புப்பேர்த்தியுமாவார்.

19-09-92 சனிக்கிழமை காலை 9-00மணிக்கு அன்னாரது பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்திற்குஎடுத்துச்செல்லப்பட்டு திருப்பலி நிறைவேற்றிய பின் நல்லடக்கத்திற்காக கோரியடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

திருமதி செபமாலையம்மா யேசுதாசன்
4-ம் குறுக்கு வீதி,
பருத்தித்துறை.

(3194)